பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 04 திங்கட்கிழமை (18-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:204

# மீண்டும் குடாநாடு மீது புலிகள் பெரும் தாக்குதலுக்கு முஸ்தீபு?

## பூநகரியிலும் நாகர்கோவிலிலும் ஆயுதங்களும் ஆள்களும் குவிப்பு

கொழும்பு,ஜூன்18

**வடகிழக்குக் கரையோரம் ஊடாகப் பெருமளவில் இராணுவ ஆயுத தளபாடங்களைக் கடத்தி வந்து களஞ்சியப்படுத்தியிருக்கும் விடுதலைப் புலிகள் தற்போது பூநகரியிலும் நாகர்கோவிலிலும் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் தமது உறுப்பினர்களையும் குவித்து வருவதாகப் புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன.**

**இது யாழ். குடாநாட்டின் மீது மீண்டும் ஒரு பெருந்தாக்குதலுக்குப் புலிகள் மேற்கொள்ளும் முஸ்தீபாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.**

குடாநாட்டை ஒட்டி புலிகள் ஆயுதங்கள் மற்றும் ஆள்களைக் குவித்து வருவது பற்றிய தகவலை பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் 'த. சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் தாம் வரையும் 'நிலைவர அறிக்கையில்' வெளியிட்டிருக்கின்றார்.

அந்தக் கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

விடுதலைப் புலிகளின் சகல ஆயுதக் கொள்வனவுகளுக்கும் பொறுப்பான புலிகளின் தலைவர் ஒருவர் கடந்த வாரம் ஆசிய நாடொன்றின் தலைநகரில் வைத்துக் கைது செய்யப்படுவதில் இருந்து வியக்க வைக்கும் விதத்தில் தப்பியிருக்கின்றார்.

கே.பி. என்று அழைக்கப்படுகின்ற குமரன் பத்மநாதன் என்ற இந்த நபர்

(2 ஆம் பக்கம் பார்க்க)



புலிகள் புதிதாக சுவீகரித்திருக்கும் பீரங்கிகளை அவர்களது கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவினரின் தளபதி கேணல் பானு (இடமிருந்து மூன்றாவது) பார்வையிடும் போது எடுக்கப்பட்ட படம்.

### நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிப்பதற்கு

## உயர்நீதிமன்று விதித்த தடையுத்தரவை சபாநாயகர் அனுரா நிராகரிப்பார்?

கொழும்பு,ஜூன்18

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்டுள்ள குற்ற விசாரணைப் பிரேரணையை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவதற்கு உயர்நீதிமன்றம் விதித்திருக்கும் இடைக்கால தடையுத்தரவை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா கவனத்தில் எடுக்காமல் நிராகரிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பான தனது முடிவை நாளை அல்லது நாளைமறுதினம் அவர் நாடாளுமன்றத்தில் வெளியிடுவார் என்றும் -

இந்த இடைக்காலத் தடை உத்தரவை நிராகரிப்பதற்கான காரணங்களை அங்கு அவர் ஆற்றவுள்ள 45 நிமிட உரையில் விளக்குவார் என்றும் -

கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சபாநாயகர் பிரபல சட்ட நிபுணர்களான எச்.எல்.டி.சில்வா, ஆர்.கே. டபிள்யூ. குணசேகர, எல்.சீ.செனவிரத்ன ஆகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் 20 இலங்கையர் மின்னல் தாக்கியதில் காயம்

மொன்ட்ரியல்,ஜூன்18

கனடாவின் மொன்ட்ரியல் நகரில் உள்ள இலங்கைச் சமூகத்தவர்கள் ஏற்பாடு செய்திருந்த உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் பங்குபற்றிய வீரர்களும், பார்வையாளர்களுமாக மொத்தம் இருபது பேர் மின்னல் தாக்கிக் காயமடைந்தனர்.



காயமடைந்த மகாலிங்கம்

மககின்ஸி கிங் பார்க்கில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மாலை 6 மணிக்குச் சற்று முன்னர் திடீரெனப் பிடித்த மழையில் நனையாமல் தப்புவதற்காக ஆடுகளமருகே இருந்த நான்கு மரங்களுக்குக் கீழ் ஒதுங்கிய உதைபந்தாட்ட வீரர்களும் பார்வையாளர்களுமே இந்த மின்னல தாக்குதலுக்கு இலக்காகினர்.

இச்சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்களில் ஆகக் குறைந்தது 11 பேர் உதைபந்தாட்ட வீரர்கள் என்றும் -

காயமடைந்தவர்களில் பலரும் இலங்கைத் தமிழர்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மின்னல் இவர்களை நேரடியாகத் தாக்கவில்லை என்றும் -

நேரடித்தாக்கத்துக்கு இவர்கள் இலக்காகியிருந்தால் பலர் உயிரிழந்திருக்க நேர்ந்திருக்கும் என்றும் -

வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

பலரும் மின்னல் தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து இன்னமும் மீளவில்லை. எனினும் எவரும் ஆபத்தான நிலையில் இல்லை என்றும் கூறப்பட்டது.



இந்தப் பூங்காவில்தான் மின்னல் தாக்கியது

காயமடைந்தவர்களில் ரூபா சந்திரலிங்கம் (வயது 19), பிரபா சந்திரலிங்கம் (வயது 21) ஆகிய இரு உதைபந்தாட்ட வீரர்களும் அன்னலிங்கம் மகாலிங்கம் (வயது 25) என்பவரும் அடங்குகின்றனர். (உ)

### பிரதம நீதியரசருக்கு ஆதரவாகப் போராட்டம்

கொழும்பு,ஜூன்18

நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணையை எதிர்நோக்கவிருக்கும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு ஆதரவாக அவரது சொந்த ஊரான நீர்கொழும்பில் 'பிக்கெட்டிங்' ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சிறுவர்கள், வயோதிபர் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்த 'பிக்கெட்டிங்'கில் கலந்து கொண்டனர்.

பிரதம நீதியரசர் தொடர்ந்தும் பணியில் இருக்க வேண்டும் என்றும்-

நீதித்துறையில் கைவைக்க வேண்டாம் என்றும் -

போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

அவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். (உ-3-9)

### திருமலையில் தேடுதல்

திருகோணமலை,ஜூன்18

திருகோணமலை - சோனகவாடி க்ராம அலுவலர் பகுதி நேற்றுப் பிற்பகல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-7)

## தீர்வு கிட்டும் என்றால் தடையை நீக்கலாம்

### டிரோன் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு,ஜூன்18

"விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படலாம் என்றால் உடனடியாகப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்.

- இப்படிக் கூறியுள்ளார் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டிரோன் பெர்னாண்டோ.

'லக்பிம' சிங்களப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தடை நீக்கம் என்பது பின்னர் மீள நடைமுறைப்படுத்த முடியாத

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளில் புலிகள் பங்கேற்க வேண்டும்

### கோருகின்றார் பிரதமர்

கொழும்பு,மே18

யுத்த முனைப்புக்களைக் கைவிட்டு சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கோரியுள்ளார்.

களுத்துறை பஸ்நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தமே கண்ணெனக் காத்திருக்கும் புலிகள் தமது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வரவேண்டும். சமாதானம் மீது அவர்கள் உண்மை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசை விட்டு வெளியேற ஹக்கீம் அணிக்கு அழுத்தம்

### கிழக்கிலிருந்து வருகின்றதாம்

கொழும்பு,ஜூன்18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெற வேண்டும் என்று கிழக்கில் இருந்து அவர்களுக்கு அழுத்தம் அதிகரித்துவருவதாக அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசுடன் தொடர்ந்து இருக்க வேண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பகுதியில் நேற்று கோஷ்டி மோதல்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்நகரை அண்டிய இருவேறு பகுதிகளில் நேற்று இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவங்களில் 6 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

யாழ்ப்பாணம் முலவைச்சந்தி - திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இரு குழுவினரிடையே நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற கோஷடி மோதலில் 5 பேர் சிறு காயங்களுககு இலக்காகினர்.

மோதலில் ஈடுபட்ட கோஷ்டி ஒன்றுக்கு ஆதரவு வழங்கியதாகக் கூறப்படும் தமிழ் ஆயுதக் குழு ஒன்றுக்குச் சொந்தமான "ஹையஸ்" வாகனம் ஒன்றும் அடித்து நொறுக்கப்பட்டது.

திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றுக்கும் முல

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை கிழக்கில் எல்லை மீளாய்வுக்கு இடமில்லை

## அமைச்சர் பத்திரன தெரிவித்ததாக கணேசமூர்த்தி தகவல்

கொழும்பு,ஜூன்18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்வரை கிழக்கில் எல்லைகளை மீளாய்வு செய்யும் பணி இடம்பெறமாட்டாது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

தம்முடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இப்படித் தெரிவித்தாக இன விவகார தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் எஸ். கணேசமூர்த்தி சொன்னார்.

கல்முனையைத் தனிமாவட்டமாக உருவாக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக்கோரிக்கை ஏற்கக் கூடியதொன்றல்ல என்று தெரிவித்த பிரதி அமைச்சர், இது விடயமாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் கலந்துரையாடியதாகவும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்படும் வரை கிழக்கில் புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்க வேண்டாம் என்றும் - கிழக்கில் எல்லைகளை மீளாய்வு செய்யவேண்டாம் என்றும் -அவரிடம் தாம் விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுள்ளார் என்றும் கணேசமூர்த்தி சொன்னார். (க-3)

### மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்18

சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகாதேவப்பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் வித்தியாசாலை அதிபர் திருமதி ச.ஸ்ரீபிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-4)

## மாவட்ட மட்ட சுற்றுப்போட்டிக்கு செல்கின்றது யாழ்.கிரிக்கெட் அணி

கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நாளை முதல் 19 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்படவுள்ள மாவட்டமட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட அணி நாளை கப்பல் மூலம் பயணமாகின்றது. ஒரு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களுக்கிடையில் முதற்சுற்று ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. அவற்றில் வெற்றிபெறும் அணிகள் அடுத்த சுற்று ஆட்டத்துக்குத் தெரிவாகும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.மாவட்ட அணி மட்டக்களப்பு மாவட்ட அணியுடன் மோதுகின்றது.

மறுநாள் வவுனியா அணியுடனும் 23 ஆம் திகதி திருகோணமலை அணியுடனும் யாழ்.அணி மோதவிருக்கின்றது.

இந்த அணியின் பொறுப்பாளராக வி.கே.சண்முகலிங்கம் செல்கின்றார். (உ-3)

## மீனவர் தங்குமடம் அமைக்க நிதி

காரைநகர்,ஜூன்18

காரைநகர் சாம்பலோடை கடற்கரைப் பகுதியில் மீனவர் தங்குமடமும் விற்பனை நிலையமும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டடங்களை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐநா. தூதரகம் ஐந்து லட்சம் ரூபா நிதியை வழங்க உள்ளது. (க-73)

# மீண்டும் குடாநாடு மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொய்யான பெயருடன் போலிக் கடவுச்சீட்டு ஒன்றைப் பயன்படுத்தி அங்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார். ஆகக் குறைந்தது ஒரு சர்வதேச புலனாய்வு நிறுவனமும் சர்வதேச சட்ட அமுலாக்கல் நிறுவனம் ஒன்றும் அவர் அங்கிருப்பது பற்றிய துப்பை கொழும்பில் உள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தின.

சிக்காமல் நழுவிச் செல்வதில் தேர்ந்தவரான இந்தப் புலி கெரில்லா உறுப்பினரின் நடமாட்டத்தைப் பின தொடர்ந்த அதிகாரிகள் அந்த ஆசியத் தலைநகரில் இருந்து ஐரோப்பிய இடம் ஒன்றுக்குச் செல்வதற்கு அவர் ஆசனம் பதிவு செய்திருப்பதைக் கண்டுபிடித்தனர். அதிகாரிகள் அவருக்கு வலை விரித்தனர். ஆனால அந்த விமானத்தில் பயணம் செய்வதற்கு குமரன் பத்மநாதன் சமுகம் தரவில்லை. அதுதான் அவர் பற்றி கடைசியாகத் தெரிந்தது.

தான் தொடரப்படுவது அவருக்குத் தெரிந்திருந்ததா? அல்லது அவருக்கு அது குறித்துத் துப்புக் கிடைத்ததா? இதற்குப் பதில் எப்போதுமே கிடைக்காமல் போகலாம்.

சிங்கப்பூரில் இவரின் நடமாட்டம் இருப்பது பற்றிய தகவல்கள் கிடைத்து சில வாரங்களின் பின்னர்தான் அவர் ஆசியத் தலைநகரில் இருப்பது தொடர்பான செய்தி கிடைத்தது. ஆனால் சிங்கப்பூரில் அவர் கண்டுபிடிக்கப்படவில்லை.

### ஆயுதக்கொள்வனவு செய்யவே வந்தார்

அருகில் உள்ள ஒரு நாட்டுக்கு தரைவழியாகச் சென்று அங்கு ஆயுதக் கொள்வனவில் ஈடுபடும் பயணமாகவே அவர் அந்த ஆசியத் தலைநகருக்கு வந்தார் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

சுற்றிவரத் தரையால் சூழப்பட்ட அந்த நாட்டில் ஆட்சியில் இருக்கும் தீவிர மதப் போக்குடைய குழுவிடமிருந்தா அல்லது அதற்கு எதிர்த் தரப்பிடமிருந்தா ஆயுதங்களை வாங்கும் திட்டம் இருந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவர் இன்னொரு ஆயுதக் கொள்வனவு முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்பது மட்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நம்பிக்கைக் குரியவரான குமரன் பத்மநாதன், கெரில்லாக்களின் ஆயுதக் கொள்வனவுப் பிரிவுக்குத் தலைவராவார். அவரது பெயரின் முதல் இரு எழுத்துக்களையும் சேர்த்து அந்தப் பிரிவுக்கு 'கே.பி. பிரிவு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஐந்து மாற்றுப் பெயர்களையும் பத்துப் போலிப் பாஸ்போர்ட்டுகளையும் பயன்படுத்தி சட்டத்துக்கு அகப்படாமல் அவர் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதாகக் கொழும்பில் உள்ள புலனாய்வு அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிரிட்டன், சிங்கப்பூர், ஜேர்மனி டென்மார்க், சுவீடன், கனடா, ஆஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் உள்ள இரகசிய வங்கிக் கணக்குகளில் இருக்கும் நிதியை இவர் பயன்படுத்துவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

அத்தோடு, சர்வதேச ரீதியில் வேறு பெயரில் புலிகள் நடத்தும் கப்பல் சேவையை வழிநடத்திக் கட்டுப்படுத்தும் பொறுப்பும் இவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்பதும் மிக முக்கியமான விடயமாகும்.

இது, வசதிக்கேற்ப பனாமா முதல சைப்பிரஸ் வரையான நாடுகளின் கொடிகளுடன் - வேறுபல கம்பனிகளின் முகப்புப் பெயர்களுடன் - புலிகள் நடத்தும் கப்பல் சேவை மற்றும் வாடகைக்கு அமர்த்தும் கப்பல்களையும் உள்ளடக்கியதாகும். அனேகமாக இவ்வாறு வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்கள் கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவை என்று கூறப்படுகின்றது.

ஆயுதங்கள், வெடிமருந்துகள், இராணுவத் தளபாடங்கள் போன்றவற்றை ஆழ்கடல் மூலம் கடத்துவதற்காக கப்பல் அணி ஒன்றையே தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தும் ஒரேயொரு கெரில்லா இயக்கம் என்ற சிறப்பு இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையே சாரும். பலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ), ஐரிஷ் குடியரசு இராணுவம் (ஐ.ஆர்.ஏ) போன்ற ஏனைய இத்தகைய அமைப்புகள் இது விடயத்தில் தமது செயற்பாட்டை மிகவும் குறைத்துக் கொண்டுவிட்டன.

அண்மைய மாதங்களில் - குறிப்பாக, ஒரு தலைப்பட்சமாக புலிகள் யுத்தநிறுத்தம் அறிவித்த கிறிஸ்மஸ காலம்முதல், அதனை மாதாமாதம் புலிகள் நீடித்து வந்த ஏப்ரல் மாதம் வரை உள்ள காலப்பகுதியில்- பெருந்தொகையான இராணுவ கனரகப் பொருள்கள் வடகிழக்கு கரையோரம் ஊடாகக் கடத்திக் கொண்டு வரப்பட்டுள்ளன என்பது பெரும்பாலும் தெளிவாகிவிட்டது. ஆழ்கடலில ரோந்து சென்ற கடற்படையினருக்கும் கடற்புலி உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களினால் மட்டுமன்றி, ஆழ்கடலில் கைது செய்யப்பட்ட ஒன்பது கெரில்லாக்கள் மூலமும் இது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

### ஆயுதக் கடத்தல் பற்றிய தகவல்கள்

பெருமளவு ஆயுதங்கள், வெடிமருந்துகள் மட்டுமல்லாமல் நீருக்கு அடியில் தாக்குதல் நடத்துவதற்கான மூடிய சுற்று 'டைவிங்' உபகரணங்களையும் (Closed Circuit Diving Equipment) புலிகள் கடத்திக்கொண்டு வந்திருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பின்னுதைப்பற்ற சுடுகலன்கள், பலவகைப்பட்ட பீரங்கிகள், 23 எம்.எம்.விமான எதிர்ப்புச் சுடுகலன்கள், தனித்தனியாகப் பிரித்து எடுத்துச் சென்று யுத்தமுனையில் பயன்படுத்தக் கூடிய கூட்டிணைவு மருத்துவ உதவி அமைப்பு போன்றவற்றையும் புலிகள் பெற்றிருப்பது பற்றிய புதிய செய்திகள் இப்போது கிடைத்துள்ளன.

புதிதாகக் கிடைத்திருக்கும் 120 எம்.எம்.மோட்டார் செலுத்திகளின் உதவியுடன் அதைப் பிரயோகிக்கக் கூடிய பெண் உறுப்பினர்களைக் கொண்ட பெரும் அணி ஒன்றை புலிகள் அமைத்து வருவதாகத் தெரிகின்றது. இந்த உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் இப்போது வன்னிக் காடுகளில் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

மார்ச் 23 ஆம் திகதி ஆழ்கடலில் நடந்த சண்டையின்போது கைது செய்யப்பட்ட புலிகளின் உறுப்பினர்களை புலனாய்வு அதிகாரிகள் விசாரணை செய்தபோது புலிகளுக்குப் புதிதாக ஆயுத விநியோகம் கிடைத்தது பற்றிய ஆதாரங்கள் தெரியவந்தன. கடற்படை கலங்களுக்கும் கடற புலிப்படகுகளுக்கும் இடையில் நான்கு மணி நேரம் நடந்த சண்டையின் பின்னர்தான் இக்கைதுகள் இடம்பெற்றன. முல்லைத்தீவு ஆழ்கடலில் வைத்து இரண்டு பாரிய 'கிரேன்கள்' பூட்டப்பட்ட கப்பலிலிருந்து இறக்கப்பட்ட இராணுவத் தளபாடங்களுடன் வந்த சிறிய பாஜ்களுக்கு பாதுகாப்பு வழங்கியபடி வந்துகொண்டிருந்த கடற்புலிப் படகுகளை கடற்படை வழிமறித்தபோதுதான் இது நிகழ்ந்தது. பாஜ்களில் இறக்கப்பட்ட பெருமளவு இராணுவச் சரக்குகள் முல்லைத்தீவு மற்றும் சாலைக் கரையோரங்களில் தரையிறக்கப்பட்டன என்பதை பிடிபட்ட கெரில்லாக்கள் உறுதி செய்தனர்.

### கடல் முற்றுகை

வடகிழக்கு கரையோரம் வழியாக தங்குதடையின்றி இராணுவ விநியோகம் புலிகளுக்கு கிடைத்து வருவது தொடர்பாக அரசுக்கு அதிகரித்து வந்த நெருக்கடி கடற்படை முற்றுகைக்கு வழி செய்தது. இதற்காக 'வர்ணக் கதிர்' (வருண கிரண) நடவடிக்கை மே 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது ஆயுதக் கடத்தலைத் தடுப்பதற்காக வடகிழக்குக கடலில் நிரந்தர முற்றுகை வியூகத்தை அமைப்பதாக அமைந்தது. விமானப் படையின் விமானங்களின் வேவு பார்க்கும் பறப்புகளோடு கடற்படைக் கலங்கள் மிக நெருக்கமாக செயற்பட்டு சுற்றிவளைப்பை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதே இந்நடவடிக்கையாகும்.

கடற்படை சுற்றிவளைப்பு போடப்பட்ட பின்னர் ஆழ்கடலில் கடற்புலிகளின் கலங்களுடன் மோதலோ, வடக்கு- கிழக்கு கரையூடான ஆயுத விநியோகக் கடத்தலை வழிமறித்தலோ இடம்பெறவில்லை. ஆனால் குறிப்பிடத்தக்க அளவு புதிய விநியோகங்கள் புலிகளுக்குக் கிடைத்திருப்பதையும், உக்கிரமான யுத்தத்திற்கு வழிவகுக்கும் புலிகளின் வலிமையை அது சந்தேகத்துக்கு அப்பால் அதிகரிக்கச் செய்துள்ளது என்பதையும் பாதுகாப்பு அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றார்கள்.

### பூநகரியிலும் நாகர்கோயிலிலும் புலிகள்குவிப்பு

இந்தப் பிந்திய ஆயுத சுவகரிப்புடன்தான் தனது புதிய களமுனைத் திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது புலிகள் அமைப்பு.

புலிகள் வடக்கில் நாகர்கோயிலிலும் பூநகரியிலும் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் உறுப்பினர்களையும் குவித்திருப்பதாக புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன. இவை யாழ். குடாநாட்டின் மீதான புதிய தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளா?

புலனாய்வு வட்டாரங்களில் இது குறித்து முரண்பாடான கருத்து நிலவுகின்றது. பாதுகாப்புப் படைகள் நடதத்தக் கூடிய தாக்குதலை எதிர்கொள்வதற்கு இந்த ஆயத்தங்கள் அவசியமானவை என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் ஏனையோர், அது கிழக்கைச் செயலிழக்கச் செய்வதற்கான தனது நடவடிக்கையை ஒட்டி, புலிகள் மேற்கொள்ளும் திசைதிருப்பும் நடவடிக்கை என்கின்றார்கள். ஆனால் வேறு சிலரோ குடாநாட்டை நோக்கிய முன்னகர்வுக்கான புலிகளின் அடுத்த திட்டம் அது என வலியுறுத்துகின்றனர்.

### கிழக்கிலும் குவிப்பு

ஆனால் கிழக்கில் - மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் குவிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 23 ஆவது டிவிஷன் படையணியின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் செயற்பாடு மிக அதிகளவில் அதிகரித்திருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு அறிவித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் மோதல்கள் ஏதும் இடம்பெற்றிருக்காவிட்டாலும் கூட, தமிழ், முஸ்லிம் பொலீஸார் மீதான தாக்குதலை புலிகள் அதிகரித்திருக்கின்றார்கள். மேலதிகமாக சிவிலியன்கள் மீதான தாக்குதலையும் அவர்கள் ஆரம்பித்துள்ளனர். பாதைத் துப்புரவு ரோந்தில் ஈடுபடும் அணிகள் மீதும் பாதுகாப்பு நிலைகள் மீதும் கூடத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

### நிஸாம் மீதான தாக்குதல்

அதிகரித்து வரும் கெரில்லாக்களின் தாக்குதல் படையினரை பதில் தாக்குதலுக்குத் தூண்டின. கொழும்பில் பல தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட உள்ளூர் தயாரிப்பு வெடிக் கருவிகளை ஒன்று சேர்த்தமைக்கான பெருமையைப் பெற்றவரான புலிகளின் கிழக்குப் பகுதி புலனாய்வுப் பிரிவுத் தலைவர் நிஸாம் மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்தியதன் மூலம் இரகசிய பதிலடியை கடந்த வாரம் பாதுகாப்புப் படைகள் வழங்கின.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலைப் பகுதியிலிருந்து உன்னிச்சை நோக்கி நிஸாம் சைக்கிலில் சென்று கொண்டிருந்தபோது வெடிகுண்டு பொருத்தப்பட்ட அவரது சைக்கிள் வெடித்தது. அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

புலிகள் பழிவாங்குவதற்கு 24 மணிநேரம் செல்லவில்லை. மாதுருஓயாவில் நடைரோந்தில் சென்ற படையினரை மறைந்திருந்து தாக்கி இரண்டு சிப்பாய்களை புலிகள் கொனறனர். அது நேற்றும் (சனியன்றும்) தொடர்ந்தது. வெலிகந்தவில் உள்ள குருளுபெத்தவில் நடைரோந்தில் சென்ற மேலும் இரு சிப்பாய்கள் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்ததை அடுத்து, பெரிய தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தும்படி அரசு உத்தரவிட்டது. புலிகளின் நிலைகள் மீதான விமானப் படை யுத்த விமானங்களின் குண்டுவீச்சுத் தாக்குதல்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. தற்போதைய நோர்வேயின் முன்முயற்சிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகளை அரசு பின்பற்றுகின்றது. இப்போது, தங்களது நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்க, புலிக் கெரில்லாக்களோ தமது இராணுவத் திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டார்கள் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் முறையீடு செய்கின்றார்கள். புலிகள் மெதுவாக - ஆனால் நிச்சயமாக - யுத்தத்தைத் தீவிரப்படுத்துகிறார்கள் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கோப்பாய்க் கோட்ட ஆங்கில தினப் போட்டிகள்

கோப்பாய்,ஜூன்18

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளுக்கான கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமையும் 25 ஆம் திகதி திங்கட்கிழமையும் கோபபாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும் என கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ஐ-72)

## மாணவர் திறன் நயப்பு விழா

கோப்பாய்,ஜூன்18

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயமும் அச்செழு மெ.மி.த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் மாணவர் திறன் நயப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு பிரதேச சபை உப தலைவர் திரு.யு.எல்.ஏ.ரவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஷெல் வீச்சு

கோப்பாய்,ஜூன்18

கோப்பாய் தரவைப் பகுதியில் இருந்து பூநகரி பகுதிகளை நோக்கி கடந்த சில வாரங்களாக இரவு வேளையில் திடீர் திடீரென ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் இரவு வேளைகளில் இப்பகுதிகள் அதிர்கின்றன.(ஐ-72)

## வைத்திய நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலையில் தொழிலாளரின் நலன்கருதி பொது முகாமையாளர் சு.மணிவாசகன் தலைமையில் தொழிலாளர் வைத்திய நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்திய நிலையத்தை சம்பிரதாய முறைப்படி டாக்டர் சங்கர் மங்கள விளக்கேற்றி திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் சு.மணிவாசகம், டாக்டர் சங்கர், குமாரகுலசிங்கம் மற்றும் தொழிலாளர் சார்பில் சிவ.ஆறுமுகசாமி ஆகியோரும் வைத்திய நிலையத்தின் தேவைபற்றி உரையாற்றினார்கள். (ஐ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்17

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் 'முரண்பாடுகளைத் தீர்த்தல்' கருத்தரங்குத் தொடரில் இவ் வருடத்தின் ஏழாவது கருத்தரங்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக சோமஸ்கந்த கல்லூரி அதிபர் தி.ஆறுமுகம் கலந்து கொள்வார்.

தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர்கள் திருமதி புஷ்பா சின்னையா, திருமதி தலைக்ஷ்மி வில்வநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராஜா மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வளங்கவுள்ளனர். (ம-9)

## மந்திகையில் எக்ஸ்ரே பிரிவும் செயலிழந்தது!!

யாழ்ப்பாணம்,ஜூன்18

மந்திகை ஆதார வைத்திய சாலை எக்ஸ்ரே பிரிவும் கடந்த நான்கு தினங்களாக செயலிழந்துள்ளது.

இங்கு கடமையாற்றியவர் விடுமுறையில் கொழும்பு சென்றுள்ளதை அடுத்தே இப் பிரிவு மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த நான்கு தினங்களாக எக்ஸ்ரே பிரிவு மூடப்பட்டிருப்பதால் ஆஸ்பத்திரிக்கு வரும் அவசர நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

சத்திரசிகிச்சைப் பிரிவும் டாக்டர் இல்லாததால் கடந்த பத்துத் தினங்களாகச் செயலிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-117)

# பங்களாதேஷில் குண்டு வெடிப்பு; 4 பெண்கள் உட்பட 22 பேர் பலி!

## அந்த நாட்டின் வரலாற்றில் மிகமோசமான வன்முறை

டாக்கா,ஜூன்18

**பங்களாதேஷில் ஆளும் அவாமி லீக்கின் பிரதேச அலுவலகம் ஒன்றில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த வெடி குண்டு ஒன்று வெடித்ததில் 4 பெண்கள் உட்பட 22பேர் உயிரிழந்தனர். பங்களாதேஷின் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைச் சம்பவம் இதுவென்று கூறப்படுகிறது.**

நாராயண்கஞ் என்ற துறைமுக நகரில் உள்ள அவாமி லீக்கின் பிரதேச அலுவலகத்தில் நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு பத்து மணிக்கு சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

அவாமி லீக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சமீம் ஒஸ்மான் கட்சி அலுவலகத்தில் சுமார் 400 ஆதரவாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்ததாகவும் -

அந்தச் சமயத்தில் பொதி ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகவும்-

பங்களாதேஷ் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடித்ததையடுத்து, மக்கள் திசை தெரியாமல் ஓடியதில், உருவான நெரிசலில் சிக்கிப் பலர் காயமடைந்தனர்.

குண்டு வெடிப்புக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை. ஆயினும், இஸ்லாமியப் பழமைவாதிகள் சமூகவிரோதிகளுடன் இணைந்து நிறைவேற்றிய கூட்டுச் சதியே இது என்று பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் நாஸிர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பங்களாதேஷ் வரலாற்றில் நிகழ்ந்த கொடிய குண்டு வெடிப்பாக இந்தச் சம்பவம் கருதப்படுகிறது.

(ஒ-9)

## அலுவலகம் திறக்க எதிர்க்கட்சிக்கு மியான்மர் இராணுவ அரசு அனுமதி

யாங்கூன்,ஜூன்18

மியான்மரில் எதிர்க்கட்சியான ஜனநாயகத் தேசிய லீக் தலைநகர் யாங்கூனில் தனது கட்சி அலுவலகங்களைத் திறப்பதற்கு இராணுவ ஆட்சி அனுமதியளித்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கும் இராணுவ ஆட்சியாளர்களுக்குமிடையிலான மிகப்பெரிய சமரச முயற்சியாக இந்த அனுமதி நடவடிக்கை கருதப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை எட்டு ஜனநாயக ஆதரவுத் தலைவர்கள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவை இராணுவ அரசு வெளியிட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அரசியல் கைதிகள் இரு பிரிவுகளாக விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங் - சாங் - சூகி தொடர்ந்து வீட்டுக் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம், அவர் அமெரிக்க மத்தியஸ்தத்துடன் இராணுவ அரசின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

மியான்மரில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்காக அங்குள்ள அரசியல் கட்சிகள் இராணுவ ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடி வருவது தெரிந்ததே. (ஒ)

### உலக அதிசயங்களில் ஒன்றான

## பைசா நகர சாய்ந்த கோபுரம் சரிந்து விழும் ஆபத்து நீங்கியது



பைசா,ஜூன்18

உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலியின் பைசா நகர சாய்ந்த கோபுரத்தைப் புனரமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

அளவுக்கு மீறி சாய்ந்துவிட்ட அதனை, மேலும் சாயாமல் தடுக்கும் பணி 1990ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது.

12ஆம் நூற்றாண்டில் தேவாலயம் ஒன்றின் மணிக்கோபுரமாகக் கட்டப்பட்ட 56 மீற்றர்கள் உயரமான அந்தக் கோபுரத்தில், தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க மேலும் 5 மாதங்கள் ஆகும்.

அடுத்த 300 ஆண்டுகளுக்கு, சாய்ந்த கோபுரம் சரிந்து விழும் ஆபத்து நீங்கிவிட்டதாக நிபுணர்கள் உத்தரவாதமளித்துள்ளனர்.

(ஒ-9)

### ஒத்திவைப்பு

ஆபிரிக்க நாடான கொங்கோவில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலாவுக்கும், உகண்டா ஜனாதிபதி சவோரி முசோரினிக்கும் இடையில் நடைபெற இருந்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

### இந்தோனேசிய போராட்டம்

ஜகார்த்தா,ஜூன்18

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் முதல் எரிபொருள்களின் விலை 30 சதவீதம் உயர்த்தப்பட்டதை எதிர்த்து நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

உலக அரங்கில்

ஏற்கனவே தடுமாறும் வாஹிட் அரசு எரிபொருள் விலையேற்றத்தால் மேலும் சிக்கல்களைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

### பெண்கள் பணியாற்றத் தடைவிதித்ததால்

## ஐ. நாவின் உலக உணவுத் திட்டம் ஆப்கானிஸ்தானில் நிறுத்தம்

### 3 லட்சம் பேர் பசியால் வாடும் நிலை

காபூல்,ஜூன்18

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் ஐநாவின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த ரொட்டி விநியோகத்தை நிறுத்தி விட்டதாக உலக உணவுத் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

காபூலில் சுமார் 3 லட்சம் ஆப்கானியர்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றி வந்த இந்தத் திட்டத்தில் ஆப்கானிஸ்தானியப் பெண்கள் பணியாற்றத் தலிபான்கள் தடைவிதித்ததாலேயே, அத்திட்டம் கைவிடப்பட்டது.

ஆப்கானிஸ்தானியப் பெண்களைக் கொண்டு ரொட்டிகள் தயாரித்து, அவற்றை சலுகை விலையில் ஏழைகளுக்கு வழங்குவதே இத்திட்டமாகும்.

இஸ்லாமிய ஷரியத் சட்டங்களைத் தீவிரமாகக் கடைபிடித்துவரும் தலிபான்கள், ஐ.நா.திட்டங்களில் பிற ஆண்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டியிருப்பதால் ஆப்கானியப் பெண்கள் உலக உணவுத் திட்டத்தில் பணியாற்றத் தடை விதித்தனர்.

இதனையடுத்து ரொட்டி தயாரிக்க ஆளில்லாத நிலையில் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆப்கானிஸ்தானில் ஏழைகளுக்கு உணவளிக்கும் பணியில் பெண்கள் ஈடுபட அனுமதிக்கப்பட்டால் மட்டுமே ரொட்டி வழங்கும் திட்டத்தை மீண்டும் தொடர முடியும் என்று உலக உணவுத் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால், ஆப்கானிஸ்தானியப் பெண்களின் மத கௌரவத்தைவிட பட்டினி பெரிதல்ல என்று கூறியுள்ள தலிபான்கள், ஐ.நா.திட்டங்களில் பெண்கள் பணிபுரிய அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

(ஒ-9)

## ஆந்திராவில் பதினாறு பேர் சுட்டுக்கொலை!

ஹைதராபாத்,ஜூன்18

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கரீம்நகர் மாவட்டத்தில், நக்சலைட் தீவிரவாதிகள் 16 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

தங்களைப் பற்றிப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்த உளவாளிகள் என்று கூறியே தீவிரவாதிகள் 16 பேரையும் கொன்றுள்ளனர்.(ஒ-9)





தொழில்நுட்பத் துறையில் மட்டுமன்றி விவசாயத்திலும் ஜப்பானியர்களின் திறமை வியக்க வைக்கிறது. அதற்கு ஓர் உதாரணம் மேற் படத்தில் காணப்படும் சதுரவடிவ வத்தகப் பழங்கள். இடது படத்தில் உள்ளன போலவே இயற்கையாகக் கோளவடிவத்திலேயே வத்தகப் பழங்கள் விளையும். ஆனால் பிஞ்சிலேயே சதுரக் கண்ணாடி அச்சுகளால் மூடி, பழங்களை சதுர வடிவில் உருவாக்கும் கலை 20 வருடங்களின் முன்னர் ஜப்பானில் அறிமுகப்ப டுத்தப்பட்டது.

### மேற்குக் கரைப் பிரதேசத்தில்

## யுத்தநிறுத்த மீறலைத் தடுக்கும் முயற்சியில் பலஸ்தீனச் சிறுவன் பலி!

காஸா,ஜூன்18

மேற்குக் கரைப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை மீற முயன்ற பலஸ்தீனத் தீவிரவாதிகளை பலஸ்தீனர்கள் தடுத்தபோது ஏற்பட்ட மோதலில் 12 வயதுப் பலஸ்தீனச் சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டான்; மூவர் காயமடைந்தனர்.

முகமூடி அணிந்த சிலர், இஸ்ரேலிய நிலைகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயன்றதாகவும்-

அவர்களைத் தடுத்து நிறுத்த பலஸ்தீனப் பொதுமக்கள் முயற்சித்ததாகவும் -

அப்போது முகமூடி அணிந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் பலியானதுடன் 3பேர் காயமடைந்ததாகவும் -

காஸா வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே வன்முறை மோதல்கள் ஆரம்பித்தது முதல் உயிரிழந்த 612ஆவது நபர் இந்தச் சிறுவனாவார்.

அமெரிக்காவின் அனுசரணையுடன் மேற்குக் கரைப் பகுதியில் தற்போது யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)

## அமெரிக்காவிடம் உதவி கோரும் தலிபான் எதிர்ப்பாளர்கள்

வாஷிங்ரன்,ஜூன்18

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களை எதிர்ப்பதற்குத் தமக்கு ஆயுதங்களைத் தந்துதவுமாறு ஆப்கானிஸ்தானின் வடபகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள கூட்டணி அரசு அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தோளில் வைத்துச் சுடப்படும் 'டின்னர்' ஏவுகணைகள் உட்பட இராணுவ உதவியும், அரசியல் ஆதரவும் தமக்குத் தந்துவவுமாறு வடபகுதி கூட்டணி அரசின் வெளியுறவு அமைச்சர் அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

அடுத்த சில நாள்களில் சர்வதேசத் தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் உதவியுடன் தலிபான்கள் தம் மீது தாக்குதல் நடத்த இருப்பது தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியைத் தலிபான்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள போதும், தலிபான்களுக்கு எதிரான தீவிரவாத அமைப்புகள் சில வடபகுதியில் கூட்டணி அரசொன்றை அமைத்துள்ளன.

(ஒ-9)

## இளவரசர் திபேந்திராவை மன்னர் சுட முயன்றாராம்

### நேபாளப் பத்திரிகை தகவல்

காத்மண்டு, ஜூன்18

நேபாளத்தில் அரச குடும்பப் படுகொலைகள் நிகழ்ந்த சமயத்தில், மன்னர் பிரேந்திரா, பட்டத்து இளவரசர் திபேந்திராவைச் சுட முயன்றதாக நேபாளப் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

படுகொலைகள் நிகழ்ந்த போது, சம்பவ இடத்தில் இருந்த இருவர் கூறிய தகவல்களின் அடிப்படையில் மேற்படி செய்தியை அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

மன்னர் பிரேந்திரா, தான் சுடப்பட்ட மறுகணம், பட்டத்து இளவரசர் திபேந்திராவைச் சுட முயன்றதாகவும் -

ஆனால் மன்னரின் சகோதரி அவரைத் தடுத்து விட்டதாகவும் -

நேபாளப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில்,

அரச குடும்பப் படுகொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திய உயர்மட்டக் குழுவின் அறிக்கையை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டதாக அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ)

# சாரதி லைசென்ஸ் வழங்கலில் இழுபறி

# அதிகாரிகளின் பின்னடிப்பே காரணம்

## கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரிகள் குடாநாட்டுக்குவர பின்னடிக்கிறார்கள். இதனால் இங்குள்ள வாகனச் சாரதிகள் தமக்குரிய சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறமுடியாத நிலை தொடர்கிறது.

மக்கள் நலன்புரிச் சங்கமும், யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினரும் இணைந்து நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடத்திய மினிபஸ் மற்றும் ஓட்டோ சாரதிகளுக்கான கலந்துரையாடலின்போது மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:–

கொழும்பிலுள்ளமேலதிகாரிகளுடன் எத்தனையோ தடவைகள் தொடர்பு கொண்டு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணியை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துங்கள் என்று கேட்டுவிட்டோம். ஆனால் அவர்கள் யாழ்ப்பாணம்வர மறுக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு சீரின்மை காணப்படுகிறது. எனவே நாம் யாழ்ப்பாணம் வந்து சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணியை மேற்கொள்ள முடியாது என்று அவர்கள் காரணம் கூறுகின்றனர்.

அண்மையில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வந்த சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரிகள் 340 பேருக்கே அதனை வழங்கினார்கள். இருந்த போதிலும் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பித்திருந்தனர்.

வாகன உரிமையாளர்கள் தமது குறைபாடுகள் மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யாழ். செயலகத்துக்கு வந்து முறையிடுவதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார்.

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் பொலீஸ் அத்தியட்சகர் சி.ஐ. கொள்ளுரே, போக்குவரத்துப் பொலீஸ் பிரிவு அதிகாரி எஸ். ஐ. உடுவல்ல, சார்ஜன்ட் இத்தகொட மற்றும் ஓட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் இ. மனோகரராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-4)

# கதிர்காமம் யாத்திரை செல்லும் பக்தருக்கு உதவ நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

கிழக்கில் இருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்திற்கு பாத யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யோகி ஸ்ரீ சிவசுந்திறி சுவாமி கதிர்காம பாத யாத்திரை சங்கத்தினர் நடத்தவுள்ள பாத யாத்திரையில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள். மட்டக்களப்பு கிரானிலிருந்து ஆரம்பிக்கும் இந்தப் பாத யாத்திரை ஆரையம்பதி, காரைதீவு, திருக்கோயில், உகந்தை வழியாக கதிர்காமம் செல்கின்றது.

பக்தர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், தேவையான வசதிகளையும் வழங்குவதற்கு உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த உதவிகள் தனது அமைச்சின் கீழ் உள்ள இந்து கலாசாரத் திணைக்களம் மூலமும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மூலமும் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரை

# டி.ஐ.ஜியாக பதவி உயர்த்துமாறு மேல்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூன் 18

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ். எம். ஆட்டிகலயை பிரதிப்பொலீஸ் மா அதிபர் (டி. ஐ. ஜி) அந்தஸ்துக்கு பதவியுயர்த்துமாறு பாதுகாப்புச் செயலாளரை மேல் நீதிமன்றம் கடந்த திங்களன்று பணித்துள்ளது.

தற்போது பிரதிப்பொலீஸ் மா அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்ட வேறு எட்டு அதிகாரிகளுடன் தன்னையும் பதவியுயர்த்தாமல் பாரபட்சம் காட்டியதாக பாதுகாப்புச் செயலர், பொலீஸ் மா அதிபர் வேறும் 12 அதிகாரிகளுக்கு எதிராக ஆட்டிகல அடிப்படை உரிமை மேல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, பண்டாரநாயக்க, எதுசூரிய ஆகியோரே மேற்படி தீர்ப்பை வழங்கினர். [க]

# நெடுந்தீவில் தென்னைகளுக்கு கிருமிநாசினி விசிறும் பணி

நெடுந்தீவு, ஜூன் 18

நெடுந்தீவுப் பகுதியில் தென்னையில் உள்ள தேங்காய்களில் காணப்படும் 'மைட்' நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குழு நவீன இயந்திர சாதனங்களுடன் நெடுந்தீவுக்கு வருகை தந்து மைட் நோய் தடுப்புக்கான கிருமிநாசினியை தென்னைகளில் விசிறத் தொடங்கியுள்ளது.

நோயைக் கட்டுப்படுத்த பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கைக்கு அனைத்துப் பொது மக்களும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-111)

# ஆலய திருப்பணி வேலைகள் துரிதம்

சண்டிலிப்பாய், ஜூன் 18

சாந்தை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் பல லட்ச ரூபா செலவில் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீர்த்தக் கிணறு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் சண்டேஸ்வரர் சந்நிதானம், மடைப்பள்ளி ஆகியனவும் அமைக்கப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தன. (க-153)

# வாய்க்காலில் கழிவுநீர் தேக்கம்

கோப்பாய், ஜூன் 18

கோப்பாய்ச்சந்திக்கு அருகில் உள்ள வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்காலில் கழிவு நீர் தேங்குவதால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது.

சந்திக்கு அருகில் உள்ள தனியார் தொழில் நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரே இவ்வாறு அங்கு தேங்குகின்றது. இந்த வாய்க்கால் நீண்ட காலம் சீர்செய்யப்படாததால் அதற்குள் பாதீனியக் களையும் நன்கு பரவியுள்ளது. (ஜ-72)

# டீசல் வரியைக் கைவிடுமாறு பிரேரணை

கொழும்பு, ஜூன் 18

டீசல் மீதான வரியை உடனடியாகக் கைவிடுமாறு அரசைக் கோரும் தனிநபர் பிரேரணையொன்றை ஐ-தே.க. எம்.பி ரவிகருணாநாயக்க கொண்டுவரவுள்ளார்.

டீசலின் விலைகள் குறைவடைந்த காலத்தில் அரசு டீசல் வரியை அறிமுகம் செய்தது. இப்பொழுது மானியம் நிறுத்தப்பட்டு விட்டது. விலைகள் உயர்ந்து விட்டன. தற்போது டீசல்வரி விதிப்பதற்கு சாட்டு எதுவும் தேவையில்லை. பாவனையாளர்களுக்கு இரட்டைவரி விதிப்பது நியாயமல்ல என்று கருணநாயக்க தெரிவித்துள்ளார். (க)

# இந்துசமய நூல்கள் தருவிக்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, ஜூன் 18

பிராமணர்களுக்கும், சிவாச்சாரியார்களுக்கும் தேவைப்படும் இந்துசமய நூல்கள் பல இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட உள்ளன.

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க, வடக்கு புனர்வாழ்வு — புனரமைப்பு மற்றும் இந்து விவகாரத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்நாடு முதலமைச்சருடன் கலந்து பேசி மேற்படி சமய நூல்களைத் தருவித்து வழங்க உள்ளார். (க-152)

# சிறுமி மரணம்

தென்மராட்சி, ஜூன் 18

மூளை மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று வயது சிறுமி நேற்று முன்தினம் மரணமானார்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வியாபாரி மூலை அம்மன் கோவிலடியில் உள்ள முகாமில் தங்கி இருந்த ஸ்ரீராஜ் சிந்துஜா (வயது 3) என்னும் சிறுமியே மரணமானவர் ஆவார். (க-117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வண்ணை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5. 30 க்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தேரும், அதற்கு அடுத்த நாள் புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெற உள்ளன. (ஒ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹா சங்காபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை 4. 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று திருவீதி உலா நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

துன்னாலை நெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 27 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஒ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

அராலி ஆவரம்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த நவோத்திரசகஸ்ர மகாசங்காபிஷேகப் பெருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-4)

★ ★ ★

வலி.மேற்கு, ஜூன் 18

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவபெருமான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவம் இடம்பெறும். 27 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும், 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (க-175)

வலி.மேற்கு, ஜூன் 18

சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். 27 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-175)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

கோண்டாவில் வடக்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளுடன் விசேட பூசையும் நடைபெறும். 28 ஆம் திகதி சங்காபிஷேகமும், விசேட பூசையும் நடைபெறும். (க-5)

★ ★ ★

கந்தரோடை—வற்றாக்கைப்பதி—அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி திருக்கோயிலின் முதலாது வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்களுக்கு மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 26 ஆம் திகதி மாலைசப்பரத் திருவிழாவும், 27ஆம் திகதி பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் சங்காபிஷேகமும், மாலை திருக்கல்யாணம், திருவூஞ்சல் என்பனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (உ-152)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மகோற்சவ கிரியைகளை வேதாகம கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ ந, சபாரத்தினக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஜ-72)

# பண்டத்தரிப்பில் இரவு வேளை வீடுபுகுந்து துணிகரக்கொள்ளை

## ஐவர் கொண்ட கோஷ்டி கைவரிசை

சண்டிலிப்பாய், ஜூன் 18

பண்டத்தரிப்பிலுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு வேளை உட்புகுந்த கோஷ்டியொன்று அங்கிருந்தவர்களைத் தாக்கி பயமுறுத்தி 50 ஆயிரம் ரூபா பணத்தையும், ஒரு சோடி காப்பு, சங்கிலி ஆகிய நான்கு தங்கப்பவுண் நிறையுள்ள நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

பண்டத்தரிப்பு — பெரிய விளான் வீதியிலுள்ள மிருசுவிலில் இருந்து இடம் பெயர்ந்து வந்து வசித்து வரும் திருமதி மரியநாயகம் மரியம்மா என்பவரது வீட்டிலேயே இந்தத் துணிகரமான சம்பவம் கடந்த வார மத்தியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த மற்றொரு பெண்ணிடம் இருந்து 500 ரூபா பணத்தையும் 'கசட் வானொலிப் பெட்டியையும்', கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நீளக்காற்சட்டை அணிந்த 3 பேரும், கட்டை காற்சட்டை அணிந்த இரண்டு பேரும் விறாந்தையில் நித்திரையில் இருந்தவரை கயிற்றினால் கட்டிக் கொண்டுபோய் அயலில் வெறும் வீடாக இருந்த வீடு ஒன்றில் விட்டு விட்டு அவரை இரண்டு பேர் பிடித்திருக்க மற்றைய மூன்று பேரும் இக்கொள்ளையை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி பண்டத்தரிப்பு சந்தியிலுள்ள பாதுகாப்பு படையினரின் முகாமில் புகார் செய்யப்பட்டதை அடுத்து படையினர் பிரஸ்தாப வீட்டுக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இளவாலை பொலீஸ் நிலையத்திலும் இக்கொள்ளைச் சம்பவம் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-135)

உதயன்

## கொள்ளிக் கண்ணர்களா?

சமாதான முயற்சி மிகவும் மந்த நிலையை அடைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது குறித்து ஆளுங் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆளுக்கொரு கருத்தையும் நாளுக்கொரு நிலைப்பாட்டையும் தெரிவித்து வருகின்றனர்.

சமசமாஜக்கட்சியின் பிரமுகரும் நீதி அமைச்சருமான பட்டி வீரக்கோன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமலே அரசாங்கம் ஏற்கனவே வகுத்துள்ள திட்டத்தை அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வந்து நிறைவேற்றினால் போதும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவராக உள்ளார்.

அவரது மேற்படி நிலைப்பாட்டையும் அவர் அடிக்கடி தெரிவித்து வந்த கடும்போக்குக் கருத்துக்களையும் ஒன்று திரட்டிய வடிவமாக அமைந்துள்ளது, அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை.

பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள மூன்று கோரிக்கைகளும் தேவையற்றவை. பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, அது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஆராயப்படவேண்டியவை என்று அவை தெரிவித்துள்ளன. அவற்றின் மதிப்பீடு அந்தளவுதான்!

இத்தனைக்கும் அவர்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கத்தின் மேலிடமும், கூட்டணி அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியும் யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் சில மாற்றங்களுடன் ஏற்க முன்வந்துள்ளன!

தமிழர் விடயத்தில், குறிப்பாக இப்போதைய முழுமுதற் தேவையான சமாதானப் பேச்சு விவகாரத்தில், உள்ளதையும் கெடுக்கும் கொள்ளிக் கண்ணன் பாத்திரத்தை இந்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் ஏற்றுள்ளனவா?

விடுதலைப் புலிகளின் மூன்றாவது கோரிக்கையான தம்மீதான தடையை நீக்கவேண்டும் என்பது குறித்து இரண்டு கட்சி கூட்டறிக்கை புதிய வாதம் ஒன்றை முன்வைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட நிலப்பரப்பை தமது ஆதிக்கத்தில் வைத்திருப்பினும், நிரந்தரமான இராணுவம் ஒன்றை வைத்திருப்பினும், தமது ஆதிக்கத்தில் உள்ள பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றும் சக்தியுடன் இல்லை. சம்பந்தப்பட்ட மக்களின் தேவைகளை (கொழும்பு) அரசாங்கமே நிறைவேற்றிவருகிறது. ஆகையால் விடுதலைப் புலிகள் தடையை நீக்கக் கோரி முன்வைக்கும் நியாயம் செல்லுபடியற்றது என்றும் கூட்டறிக்கை "நியாயம் பேசுகிறது"!

தமது பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வலுவையும் விடுதலைப் புலிகள் பெற்றிருப்பின் அந்தப் பிரதேசத்தை ஒரு தனி நாடாகவல்லவா பிரகடனப்படுத்தியிருப்பார்கள். அதற்குப் பின்னர் அவர்கள் அரசாங்கம் என்ற உயர் நிலையில் நின்றல்லவா பேச்சுவார்த்தைக்கு வருவார்கள். தடை நீக்கம் அப்போது தேவைப்படாதே?!

பலஸ்தீன விடுதலை இயக்கம், தலிபான் அமைப்பு என்பன தாம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் அரசுகளை அமைத்து ஆட்சி செய்கின்றன என்பதனை எவரும் அறிவர்.

ஒரு மொழி என்றால் இரண்டு நாடுகள்; இரு மொழிகள் என்றால் ஒரு நாடு என்று உண்மைத்துவமான கருத்தை 1956இல் தெரிவித்தவர் கொல்வின் ஆர்.டி.சில்வா. அவர் அரசமைப்பு அமைச்சராக இருந்து இயற்றிய 1972ஆம் ஆண்டின் அரசமைப்புத் திட்டமே அதற்கு முன்னர் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளையும் (29ஆவது சரத்தை) நீக்கி அரசியல் அநாதைகளாக்கியது.

இப்போதைய இடதுசாரிக் கட்சித் தலைவர்களும், அதேவழியில் சென்று, தமிழர் நலன்களைப் புறந்தள்ளி தமது கட்சி நலன்களுக்கும் தமது சொந்த முன்னேற்றத்துக்குமே முன்னுரிமை கொடுப்பார்கள் என்பது எதிர்பார்த்ததுதான்!

# கல்லூரியை மீண்டும் கட்டி எழுப்ப பழைய மாணவர் முன்வரவேண்டும்

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விழாவில் உரை

ஊர்காவற்றுறை, ஜுன்18

நீண்ட கால இடம்பெயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள எமது கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்கு கட்டி எழுப்புவதற்கு பழைய மாணவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட கல்லூரி தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்லூரியின் அதிபர் வண.பிதா எ.ஜே.ஜேசுதாசன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பழைய மாணவர்கள் கல்லூரியோடு இணைந்து கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அது மட்டுமல்லாமல் கல்லூரியின் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான உதவிகளை அளிக்க முன்வரவேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் பாடசாலையில் பயிலும் போதும் மட்டுமல்லாமல் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் கூட சீரிய நற்பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கப் பழக வேண்டும். அதன் மூலம் பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாப்பது மட்டுமன்றி ஆரோக்கியமான மனித உறவினையும் வளர்த்துக் கொள்ள முடியும் - என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா உரையாற்றும்போது கூறியதாவது:-

ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் பெரியோர்களை வழிகாட்டிகளாக கொண்டு ஒழுகுவதன் மூலம் அவர்களைப் போல் உயரிய இலட்சியத்தை அடையமுடியும் - என்றார்.

நானும் இந்தக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற ரீதியில் மாணவர்களது பயன்பாட்டிற்கென கணனி இயந்திரங்களையும் பாண்ட் வாத்திய இசைக் கருவிகளையும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரோடு தொடர்பு கொண்டு பெற்றுத்தருவதாகவும் அவர் கூறினார். (ம-16)



"மண் வாசனையில் மூன்று நாடகங்கள்" நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை புனித மரியாள் வித்தியாலய முன்னாள் அதிபர் சி.தார்சீசியஸ், எழுத்தாளர் செங்கை ஆழியானிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகப் பொருளாளர் ப.சி.செல்வராசா, நூலாசிரியர் செ.மெற்றாஸ் மயில், கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ)

# இடம்பெயர்ந்து வவுனியாவில் வசிக்கும் மக்களுக்கு மேலும் ஒரு தொகுதி வீடுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்18

வவுனியாவில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிரந்தரமான வீடுகள் அமைத்து மீளக்குடியமர வைக்கும் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதி வீடுகள் இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 270 குடும்பங்களுக்குரிய வீடுகள் இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன. வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர வைக்கும் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே 212 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்தில் இதுவரை மீளக் குடியமர்ந்த மக்களுக்குரிய காணிப் பத்திரத்தை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெயர்ந்து வாழும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவைச் சேர்ந்த மக்களுக்குச் சொந்தமான வீடுகள் கட்டிக் கொடுத்து மீளக்குடியமர்த்தும் இத்திட்டம் 1500 வீடுகளைக் கொண்டது. இதில் மிகுதி வீடுகள் மேலும் மூன்று தொகுதிகளாக விரைவில் வழங்கப்படவுள்ளன. இதற்குரிய நடவடிக்கைகளுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் ஒரு தொகுதி நிதியை வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார் என்றும் அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளை மூலம் ஆசிரியர் சம்பளம்

அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, புத்தூர், நீர்வேலிப் பகுதி பாடசாலைகள் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளங்கள் இதுவரை காலமும் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதிகளிலுள்ள வங்கிக் கிளைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தன.

தற்பொழுது அச்சுவேலியில் மக்கள் வங்கி செயற்படுவதால் ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களையும் மற்றும் கொடுப்பனவுகளையும் அச்சுவேலியில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (க-11)

## நாளை

ஆனி 5
செவ்வாய்க்கிழமை
திதி: திரயோதசி
முன் இரவு 8.59 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முன் இரவு 8.14 வரை
கார்த்திகை விரதம்
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 10.24 - 11.54
ராகுகாலம் : 2.54 - 4.24
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உழைப்பும் நம்பிக்கையும் சேருமிடத்தில் ஏழ்மை இருக்காது!

## நாட்டு நடப்பு

எட்டி எட்டி பார்த்தபடி
ஏனடி மிலாந்துகிறான்
கட்டையற்றை கடைக்குட்டி
கவுண் போட்டு முடியவில்லை
கூட்டிக் கொண்டு போகாட்டி
குட்டுறாங்களாம் குமரிக்கு
கட்டப்போறவன் இவன்தானே
கண்காணிப்பாய் இருக்கட்டும்.

- விகடகவி -

# சிங்களவர் இனவாதிகளை ஒதுக்கி வைக்காமல் சமாதானம் காண நினைப்பது பகற்கனவு

## வாழைச்சேனையில் அலிஸாகிர் எம்.பி.

கொழும்பு,ஜுன்18

நாட்டில் வாழும் இனவாதச் சக்திகளைச் சிங்கள மக்கள் இனம் கண்டு அவர்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கிவைக்காத வரையில் நாட்டில் நிரந்தர அமைதியையோ சமாதானத்தையோ நிலைநாட்டுவதென்பது பகற்கனவாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அலிஸாகிர் மௌலானா (ஐ.தே.க.) தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனைப் பகுதியில் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 10 வருடங்களாக நாட்டில் வாழும் அனைத்து சமூகங்கள் இடையேயும் கசப்புணர்வுகளை உருவாக்கி மோதல்களை ஏற்படுத்த இனவாத சக்திகள் பகிரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன.

இந்த விஷமிகளின் வலைக்குள் எவரும் சிக்கிவிடக் கூடாது. அவர்களின் கூற்றுகளுக்கு எவரும் அடிபணிந்துவிடக்கூடாது.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவி இளைஞர்களைப் படுகொலை செய்ததும், மாவனல்லைப் பகுதியில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் இனவாத சக்திகளின் ஆதரவில்தான்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 1985ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தி எமக்கு இடையில் காலம் காலமாக இருந்து வந்த புரிந்துணர்வை - உறவைச் சிதைக்க இனவாதிகள் திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். இவற்றுக்குள் நாம் சிக்கிவிடக் கூடாது - எனவும் அவர் தெரிவித்தார். (க-6)

# அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சிகிச்சைகள் விஸ்தரிப்பு

## நோயாளர் வரவும் அதிகரிப்பு

அச்சுவேலி, ஜுன்18

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மட்டும் நாளாந்தம் 300க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். கடந்த மாதத்தில் மட்டும் 7,500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வைத்தியசாலையில் உள்ள வசதி நிலைக்கேற்ப சலரோக சிகிச்சை கிளினிக், பொது மருத்துவக் கிளினிக், குடும்பக் கட்டுப்பாட்டுக் கிளினிக், மூட்டுவாதக் கிளினிக், கர்ப்பிணித் தாய்மாருக்கான கிளினிக் என்பன முழுமையாகச் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் மகப்பேற்று வார்ட், பொது மருத்துவ வார்ட், சிறு சத்திரசிகிச்சை வார்ட், குழந்தை மருந்து வார்ட், பற்சிகிச்சைப் பிரிவு என்பன உரிய முறையில் செயற்படுவதால் குறிப்பிடத்தக்களவு நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். இதனால் இங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படும் நோயாளரின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இந்த வருடத் தொடக்கத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற வைத்திய கலாநிதி ஒருவர் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் பயனாக வைத்தியசாலையின் சேவை வசதிகளை விருத்தி செய்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என்றும் -

புதிய மாற்றத்தினால் தமக்குத் திருப்தியான சேவை கிடைப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-11)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




மதியாதார் வாசல் மிதித்தாலும்
மிதியாதே உன் காலை
மிதிவெடிப் பிரதேசங்களில்!
மன்னிக்காது உன் காலை
மறைந்திருக்கும் மிதிவெடிகள்!!

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் தெற்கு பிரதேச சபைத்
தலைவராகப் பதவியேற்ற

**திரு. க. கமலசேகரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரைப் பிரதேச சபைத் தலைவராக நியமித்ததையிட்டு

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ் விவகார அமைச்சர் மாண்புமிகு

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**



அவர்களுக்கு

எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பிரதேச சபைத் தலைவரின் தன்னலமற்ற சேவைகள் மேலும் சிறப்புற, தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினர்
*கற்பொக்கணை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்,*
*உடுவில் கலைமதி சனசமூக நிலையம், கல்விப் பூங்கா.* (89141)


# விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,ஜுன்18

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இறுதிக் கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக 5 பேரின் பெயர் விவரங்களை அறிவித்துள்ளனர்.

காணாமற் போனவரின் பெயர் விவரமும், அவர் தொடர்பாக முறைப்பாடு செய்தோர் மற்றும் சாட்சிக்காக அழைக்கப்பட்டவரின் விவரங்களும் வருமாறு:-

✪ சின்னத்தம்பி - கோபாலகிருஷ்ணன் (கோவை இல.B/77) கைதடி தெற்கு நாவற்குழி, சுப்பையா - பரமேஸ்வரன் (சாட்சி)

✪ கந்தசாமி - புஸ்பலதா (கோவை இல..B/14 மந்துவில் மேற்கு கொடிகாமம், கந்தசாமி சீலா - துன்னாலை தெற்கு கரவெட்டி (முறைப்பாடு) கதிரன் - கந்தசாமி (சாட்சி)

✪ அன்ரன் - தெய்வேந்திரன், ரமேஸ் - லோகநாதன், [illegible]பகதரன் சாவகச்சேரி வடக்கு மீசாலை.

✪ இரத்தினசிங்கம் பிரியதர்சன் இல.5 வெதுப்பகவீதி கெருடாவில்.

✪ அன்ரன் தெய்வேந்திரன் - நாகேந்திரராணி - இயக்கச்சி வீதி பளை, சிதம்பரப்பிள்ளை - தில்லையம்பலப்பிள்ளை, ஸ்ரீதரன் - ராஜரட்ணம், பொன்னம்பலம் - சிவசுதன் டச்சு வீதி - சாவகச்சேரி(சாட்சிகள்.

(ஒ-4)

## ஓய்வூதிய மாற்றப் படிவங்கள் இல்லை

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில், ஓய்வூதியம் மாற்றம் செய்வதற்கான படிவங்கள் இன்மையால் அநேக ஓய்வூதியர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.


# நீங்காத நினைவஞ்சலி

31ஆம் நாள் 9ஆம் மாதம்



அமரர்
**வேலுப்பிள்ளைஆறுமுகம்**

மண்ணில்:- 26-03-1932
விண்ணில்:-19-05-2001



திருமதி
**ஆறுமுகம் மீனாட்சி**

தோற்றம்:- 26-01-1932
மறைவு:- 20-09-2000

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி - எமை
வாழவைத்த தெய்வங்களே! - எங்கள்
இதயக் கோயிலில் என்றென்றும் - உங்கள்
நினைவுத் தீபம் ஏற்றி வைப்போம்.

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வங்கள் மறைந்த போது எம்முடன் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் இதயபூர்வ நன்றிகளைச் சமர்ப்பணமாக்குகின்றோம்.

நன்றி நவிலலும்
மக்கள்:-
DR.ஆ.கேதீஸ்வரன்
ஆ.சுப்பிரமணியம்
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*"மணி வாசா"*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி* (89094)



# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்மா, வாதநோய்கள்,
வலிப்புநோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க் குத்து,
இரத்தப் போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக் குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர். (88614)

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்,**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459*



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

Happy Birthday




# செல்வி டேவிட்ராஜன் டேவினியா

லண்டனில் வசித்துவரும்
டேவிட்ராஜன் - சாந்தி தம்பதிகளின் அருமைப் புதல்வி
**செல்வி டேவினியா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (18-06-2001) திங்கட்கிழமை தமது லண்டன் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். டேவினியாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (எட்வேட்ராஜா குடும்பத்தினர்), சித்தப்பா, பெரியப்பா, லண்டன் சிலவ் நகரில் உள்ள பெரியமாமா (சிறீ), சின்னமாமா (லெனின்), ஆசைமாமா (கமல்), குட்டிமாமா (சபேஷ்), சித்தப்பாமார், பெரியப்பாமார், மாமிமாருடன் அங்குள்ள உற்றார், உறவினர் அனைவருடனும் இலங்கையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, சித்தா, சித்தி, அப்புச்சிமார்களும் மற்றும் ஏனைய உறவினர்களும் கர்த்தர் யேசு இரட்சகர் கருணையுடன் பல் கலையும் கற்று சீரும் சிறப்புமாக நீடூழிகாலம் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*31, ஸ்ரான்லி கல்லூரி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (89104)

முருகேசு தேவமதுரம்
(அம்மப்பா)



உ

**உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்**

*வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001*

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 20.06.2001 | மு.ப.9.45மணி |
| சங்காபிஷேகம்: | 27.06.2001 | மு.ப.11.00மணி |
| வேட்டைத்திருவிழா: | 02.07.2001 | பி.ப.2.30மணி |
| சப்பறம்: | 03.07.2001 | பி.ப.6.00மணி |
| தேர்: | 04.07.2001 | மு.ப.9.30மணி |
| தீர்த்தம்: | 05.07.2001 | மு.ப.9.00மணி |
| பூங்காவனம்: | 06.07.2001 | பி.ப.3.00மணி |

அடியார்கள் அனைவரும் எம்பெருமான் சந்நிதியில் நடைபெறும் திருவிழாக்களுக்கு மலர் மாலை, பால் முதலியவற்றுடன் ஆசாரசீலர்களாக வருகை தந்து வீரபத்திரர் திருவருள் பெற்றுய்வீர்களாக!

*உடுப்பிட்டி.* (89135) - தர்மகர்த்தா சபை.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்கு ~ கிழக்கு மாகாண கலை கலாசார அமைச்சின்
சாகித்திய விருது பெற்ற

**சீனத்துக் கவிதைகள்**
மொழி பெயர்ப்பு நூல்





**'பாஞ்சாலி சபதம்'** மொழி பெயர்ப்பு
ஆங்கில நாடக உரு



**திரு.வை.சுந்தரேஸ்வரன்**
ஆங்கில விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
எழுத்தாளர்.

**திரு.இரா.பஞ்சலிங்கம்,**
*'நான் உங்கள் தோழன்' திரைப்பட நடிகர், முதுபெரும் நாடகக் கலைஞர், சமூக சேவைத் தொண்டர்*

**இவர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**இவர்களைப் பாராட்டுவதில் மகிழ்வுறும்:**

பருத்தித்துறை:- கலைஞர் வட்டம்,
பருத்தித்துறை:- திருக்குறள் மன்றம்,
பருத்தித்துறை:- எம்.ஜி.ஆர். பொதுப்பணி மன்றம்,
பருத்தித்துறை:- பீமசேனன் கரலாக்கட்டை உடற்பயிற்சி நிலையம்.

(சி17131)



# UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for civil Engineering works or Multi Purpose Co-operative Socities for the Repairs/Addition/Improvements at Botanical Garden/Glass House, Dept. of Botany, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 28-06-2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit Rs. 5000/=
2. Non-refundable deposit Rs. 500/=

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's Office, University of Jaffna, on or before 10.07.2001 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Planning Branch of this University during office hours if necessary.

**Registrar,**
University of Jaffna. (C/17103)

*P.O Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*

# கிளிநொச்சி மாணவர் ஒன்றியத்தின் கல்வி வளர்ச்சி நிதிக்கு உதவுவீர்!

நீண்ட காலமாக வடமாகாணத்தின தானியக் களஞ்சியமாகத் திகழ்ந்து வந்த கிளிநொச்சி மாவட்டம் இன்று கொடிய யுத்த விளைவுகள் - வளங்களை ஒட்டுமொத்தமாகச் சீரழித்து விட்டது. கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்ட

## நிகழ்வுகளின் பின்னால்....

கிளிநொச்சி மாவட்டத்தில் 1990களில் மேற்கொள்ளப்பட்ட 'வலம்புரி' இராணுவ நடவடிக்கையினால் பூநகரி பிரதேசமும் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் 1996ஆம் ஆண்டு கரைச்சி, கண்டாவளை பிரதேசங்களும், கடந்த ஆண்டு யுத்தத்தினால் பளைப்பிரதேசமும் என ஒட்டுமொத்த மாவட்டமே யுத்த அனர்த்தங்களினால் பெரும் பாதிப்படைந்துள்ளன.

இதனால் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளங்கள் யாவும் சீரழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

### மாணவர்களின் பொருளாதார நிலை

இந்நிலையில் இப்பிரதேசங்களில் இருந்து உயர்கல்வியைத் தொடரும் நோக்குடன் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் அதிகரித்த வாழ்க்கைச் செலவை ஈடுகொடுக்க முடியாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வரையான பணம் தேவைப்படுகின்ற போதும் 1,450 ரூபா மட்டுமே மகாபொல, உதவு தொகைகள் மூலம் கிடைக்கப்பெறு கின்றது. இதனைக் கொண்டு தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாதவர்களாக மாணவர்கள் காணப்படுகின்றனர்.

### கல்வி வளர்ச்சி நிதியம்

இவ்வாறு மிகவும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உதவுவதை நோகக மாகக் கொண்டு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அறக்கொடை நிதியத்தின் பல்வேறு நிகழ்வுகள் மூலமும், நலன்விரும்பிகளிடம் இருந்தும் பெறப்பட்ட பணம் வங்கியில் நிலையான வைப்பிலிட்டு அதில் இருந்து வரும் வட்டியினை மாணவர்களுக்கு உதவு தொகையாக வழங்கி வருகின்றோம்.

இந்நிதியத்தின் கீழ் இவ்வாண்டும் 13 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். காலத்தின் தேவைகருதி மாணவர்களின் எண்ணிக்கையும், உதவு தொகையின் அளவையும் அதிகரிக்கும் நோக்குடன் இவ்வாண்டும் நிதி சேகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். மேற்படி நிதியத்திற்கு உதவி வழங்க விரும்புபவர்கள் *"கணக்கு இலக்கம் 21878, 'அறக்கொடை நிதியம்', மக்கள் வங்கி கிளை 162, கிளிமாவட்ட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்"* என்னும் கணக்கு இலக்கத்தில் பணத்தை வைப்பிலிட முடியும்.

***கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம்,***
***யாழ். பல்கலைக்கழகம்.***

# கொடிகாமத்தில்
# சட்டவிரோத கள் விற்பனையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

தென்மராட்சி, ஜுன்18

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் சட்டவிரோதமாக கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சங்க நிர்வாகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

இடம்பெயர்வின் பின்னர் வரணி, கொடிகாமம் ஆகிய பகுதியில் உள்ள சங்க அங்கத்தவர்களின் வேண்டுகோளின் பேரில் இப்பகுதிகளில் கள்ளுத் தவறணைகள் திறக்கப்பட்டுள்ளன. எனினும் சட்ட விரோதமாகக் கள்ளினை உற்பத்தி செய்து விற்பனை செய்பவர்களால் தவறணைக்கு கள்ளு வழங்கும் அங்கத்தவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கத் தவறணைகளில் மேலதிகமாக உள்ள கள்ளினை திக்கம் வடிசாலைக்கு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கள்ளினை தவறணைகளுக்கு வழங்குமாறும் -

இப்பகுதியில் சட்டவிரோதமாக கள் விற்பனை செய்வது உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளதால் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் -

சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ம-117)

## குடிதண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு

கொழும்புத்துறை மேற்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விபுலானந்தர் வீதி, கந்தர் மணியம் வீதி, வில்வந்தெரு வீதி போன்ற பகுதியில் உள்ள குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றன.

விநியோகக் குழாய்கள் செப்பனிடும் பணிகள் பூர்த்தியானதும் குடிதண்ணீர் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# திருட்டு நகையை விற்க முயன்ற 10 வயது மாணவன் சிக்கினான்

திருட்டு நகையை விற்க முயன்ற பத்து வயது மாணவன் அதிபரிடம் சிக்கிக் கொண்டான்.

தம்பசிட்டியில் உள்ள ஒரு பாடசாலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாடசாலை அருகில் வியாபாரம் செய்யும் பெண்ணிடம், மேற்படி மாணவன் ஓர் ஆபரணத்தைக் கொடுத்து, ஐம்பது ரூபா கடனாகத் தருமாறு கேட்டதாகவும் -

சந்தேகமடைந்த அந்தப் பெண்மணி, அதிபரிடம் தெரிவித்ததையடுத்து, அதிபர் மாணவனிடம் விசாரித்ததாகவும் -

அதனைத் தொடர்ந்து அந்த மாணவன் மொத்தம் 4 பவுண் நிறையுடைய 4 தோடுகள், 3மோதிரங்கள் ஆகியவற்றை அதிபரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நகைகள் அனைத்தும் கடந்த வாரம் பருத்தித்துறை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து திருடப்பட்டதாக மாணவன் தெரிவித்ததையடுத்து, நகைகளின் உரிமையாளரிடம் அவற்றை பாடசாலை அதிபர் ஒப்படைத்தார். (ஓ-117)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

1. கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலக ஆலோசனைக்கூடம் விஸ்தரித்தல் (கட்டடம் 11) வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம் - 8 இலும் அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001ஆம் ஆண்டு ஆடி மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலக ஆலோசனைக்கூடம் விஸ்தரித்தல் (கட்டடம் 11) | ரூபா 15,000/- | ரூபா 500/- |

5. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுலவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
*கட்டடங்கள் திணைக்களம்,*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

(C/17125)

**பிரதம பொறியியலாளர்,**
*யாழ்ப்பாணம்.*

# அச்சுவேலியில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவில்லை

அச்சுவேலி, ஜுன்18

அச்சுவேலிப் பகுதியில் நீண்ட காலமாக விசர் நோய் தடை மருந்து வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் தடை மருந்து ஏற்றுவது தொடர்பான நேர அட்டவணை அறிவிக்கப்பட்டது. எனினும் பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டது.

கடும் வரட்சி நிலவும் காலப் பகுதியில் நாய்களுக்கு விசர் நோய் வரக் கூடிய ஆபத்து காணப்படுவதால் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடை மருந்து ஏற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொது ஸ்தாபனங்கள் அச்சுவேலிப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (ம-11)

உ

சாவகச்சேரி

## சந்திரசேகர வாரிவனநாதர் சிவன்கோயில்

## வருடாந்த மஹோற்சவம்

சிவன் அடியார்களே!

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ காலம்


**19-06-2001 செவ்வாய்க்கிழமை கொடியேற்றம்**
**27-06-2001 புதன்கிழமை தேர்**
**28-06-2001 வியாழக்கிழமை தீர்த்தம்**

இடம்பெயர்வு காரணமாக இவ்வருடம் உற்சவம் நடத்த முடியாமல் உள்ளது. இக்காலப்பகுதியில் மெய்யடியார்கள் விரதமனுட்டித்தும் பிரார்த்தனையில் ஈடுபட்டும் மக்கள் அமைதியும் சுபீட்சமும் பெற சிவபெருமானை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

திருமதி ப.சந்திரசேகரம்
ஆலய தர்மகர்த்தா.

(89060)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை

*(அதிபர், யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்)*

எங்கள் அதிபர் அவர்கள் அதிபர் தரம் 1ற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று மேன்மையுற வேண்டுமென உளமார வாழ்த்துகின்றோம்.

உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
*யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்,*
*பளை.*

(89147)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 . 01 . 1926



உதிர்வு 18 - 06 - 1991

## திருமதி சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை

பார் புகழ எம்மைச் சீராய் வளர்த்து
பரமன் கழல் சேர்ந்த அன்பு அன்னையே!
பத்தாண்டுகள் சென்றாலும் குன்றாத பற்றுடன்
பிரார்த்திக்கின்றோம் நின் ஆன்ம சாந்திக்காக!

*பத்தாவத்தை,*
*பிரதான வீதி,*
*இளவாலை.*

*பாசமிகு பிள்ளைகள்:*
ச.சந்தானம் குடும்பத்தினர்
ச.விமலகாந்தன்
ச.நகநந்தினி

(88872)

# தமிழர் பண்பாட்டை தலையில் சுமப்போம்!

ஆண்களும் பெண்களும் பருவம் எய்திய பின்னர் துணைப் பாலியல் வேறுபாடுகள் தோன்றும். அவை தோன்றும் காலத்தில் முதலில் கூச்சமான சுபாவங்கள் தோன்றும். உடல் உறுப்புகளில் மாற்றம், உணர்வுகளில் மன எழுச்சி, கூடிப் பழகுவதில் கூச்சம் ஒரு புறம், குதூகலம் மறுபுறம், இவற்றினால் இடக்கர் அடக்கல்கள், கடக்கக் கருதமுடியா இயல்புகள் என்பன உண்டாகும். காலப்போக்கில் கட்டிளமைப் பருவத்தினரின் இந்த மாறுபாடுகள் வழமைக்குத் திரும்பிவிடும். நடை உடை பாவனை, ஒப்பனை செய்வதில் உள்ளார்ந்த ஆர்வம் என்பனவற்றில் வெளிப்பாடுகள் தோன்றும். பாரம்பரியமாக வந்த தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்கள் பண்பாட்டோடு மருவியும் பெருகியும் வந்தன. அந்நியரின் வரவால் *"புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்"* என்பதைப் போல புதுமை மோகங்களில் தம்மைப் பறிகொடுத்து பிறபண்பாட்டை அச்சொட்டாகச் சிக்கெனப் பிடித்துப் பழையன களைந்தனர். எமது பண்பாடுகள் அருகத் தலைப்பட்டன; கருகியும் போயின.



உடை அலங்காரத்தைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பெண்களின் சேலை, சட்டை அணியும் நடைமுறை இன்றும் ஏனையவர்களாலும் பின்பற்றப்பட்டு வருவதை நாம் காணலாம். *"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்"* என்பது தொன்றுதொட்டு எம் மத்தியில் சொல்லப்பட்டு வரும் ஒரு முதுமொழியாகும். தமிழர் வாழும் பிரதேசத்தில் உள்ள தட்ப வெப்பநிலைகளுக்கு ஏற்றது பருத்தி ஆடை என்பர். அதுவும் தமிழ் ஆண்கள் நாலுமுழ வேட்டியும் சால்வையும் அணிவதே வழக்கமாக வந்துள்ளது.

**நா.க.சண்முகநாதபிள்ளை**

மகாத்மா காந்தி அவர்கள் ஒரு முறை தமிழ்நாட்டிற்கு வந்தபோது ஏழை விவசாயிகள் 4 முழ வேட்டியும், சால்வையும்அணிந்திருப்பதைக் கண்டு - தன்னுடைய உடையையும் அவ்வாறே மாற்றிக் கொண்டு இறுதி வரை அவ்வாறே அணிந்து வந்தார் என்பர். ஆங்கில நாட்டிற்கு 6ஆவது ஜோர்ஜ் மன்னரைச் சந்திக்கச் சென்ற போது கூட நாலுமுழ வேட்டியோடும் சால்வையோடுமே சென்றார். குளிரான ஆங்கில நாட்டின் மன்னர் அவையிலும் அந்த உடையோடு மன்னருடன் சரியாசனமாக அமர்ந்து உரையாடினார். அவருடைய தேசியப்பற்றைக் கௌரவித்த ஆங்கில அரசும் அதனை அங்கீகரித்தது. இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் அவரை *"அரை நிர்வாணப் பக்கிரி"* என்று ஏளனமும் செய்தனர். என்றாலும் கொள்கையில் உறுதியாக [illegible] காந்தி மகானுக்கு அவருடைய உடையே ஓர் ஆளுமையைத் தந்தது. "ஆள்பாதி (அரைக்கு மேல் அரைவாசி உடம்பு உடையால் போர்த்தப் படாமலும்) ஆடைபாதி" (அரைக்குக் கீழ் உடை உடுக்கப்பட்டிருந்தமையாலும்)என்பது காந்திக்கும் பொருந்தும் போலும். தமிழர் பொருத்தப்பாடும் இதுவோ? எம் முதியவர்களைக் கண்டு தெளிக.

**தலைப்பாவின் வகைகள்**

ஆனால் 'ஆள் பாதி ஆடைபாதி' என்பது ஒருவரின் தோற்றப் பொலிவை அவர் அணியும் ஆடை எடுப்பாக, மரியாதையாகக் கௌரவிக்கக்கூடிய தன்மையை வெளிப்படுத்தும் ஒரு கூற்றாகவே கருதமுடியும். "இரக்கப் போனாலும் சிறக்கப் போ" என்பதால் அறிக. தமிழர் தம் "தலைப்பா" இதற்கு கை கொடுத்து உதவுகின்றது. "தலைக்கு வந்தது தலைப்பாவோடு போக" என்ற பழமொழியும் வழக்கத்தில் உண்டுதானே. தலைப்பா ஒரு தலைக்கவசம் போன்றது. தமிழர் தம் தலைப்பா பல்வேறு வகைப்பட்டது. வேலை செய்யும் போது கட்டுவது, விசேட பண்டிகைகளில் கட்டுவது, மாப்பிள்ளைக்கும், தோழனுக்கும் கட்டுவது, நாடகங்கள்-கூத்துக்களில் கட்டுவது, போர்முனைக்குச் செல்லும் போது கட்டுவது, பொழுது போக்குக் காலங்களில் கட்டுவது எனப் பலவாறு அமையும். அப்படி அமைவது மட்டுமல்லாமல் கட்டும் சால்வையின் அமைப்பு, நீளம் அகலம் அலங்காரம் என்பனவும் மாறுபடும். மகுடம் வைப்பது போன்ற தலைப்பா மதிப்பார்ந்த பெரியவர்களுக்கு வைக்கப்படும். ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் "சேர்" என்ற கௌரவப் பட்டம் பெற்ற தமிழர்களான சேர் பொன். இராமநாதன், சேர் பொன்.அருணாசலம், சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, செனற்றர் சு.நடேசன் போன்றவர்களும், முகாந்தரம் பட்டம், முதலியார் பட்டம் பெற்றவர்களும் சட்டத்தரணியகளாக இருந்த பலரும் தலைப்பா வைத்து எம்மிடையே உலாவியதை நாம் மறந்து விட முடியாது.

# தலைப்பாவும் மீசையும் தமிழ் ஆடவரின் தனித்துவ அடையாளங்கள்

இவர்கள் எமது தமிழர் பண்பாட்டைத் தலையிலே சுமந்து பல பிற நாடுகளுக்கும் சென்று *"தமிழர் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு"* (உடையுண்டு) என்று நிலைநாட்டியவர்களாவர்.

*"குடி செய்வல் என்னும் ஒருவார்க்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்"*

என்பது வள்ளுவர் வாய்மொழி. அதாவது எனது குடிப் பெருமையை உயர்த்துவேன் என்று முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வமும் தனது உடையை வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்ய முன்வரும் என்பது இதன் கருத்து. எம் தமிழ் உழவரும் மற்றும் வேலைகளில் ஈடுபடுவோரும் கொடுக்குக் கட்டிக்கொண்டும் தலைப்பாவை வரிந்து கட்டிக் கொண்டும் முயற்சியில் ஈடுபடுவதை நாம் காணலாம். தலைப்பாவின் பக்கங்களில் உள்ள துணிமடிப்புகளிலே தமக்குத் தேவையானதைச் சொருகி வைத்தும் கொள்வர். அல்லாமலும் தற்போது சாரணர்கள் பயன்படுத்தும் முக்கோணத் துணி பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுவது போல தலைப்பாத் துணியும் பயன்படும். இப்போது புரிகிறதல்லவா தலைப்பாவின் தனித்துவம். சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் தமிழரின் இந்தப் பண்பாட்டைத் தலையாகவோ, தலைக்கு மேலாகவோ கொண்டு ஒழுகினால் என்ன?



அடுத்து இந்தத் தலைப்பாவோடு மீசையும் சேர்ந்து விட்டால் எமது தோற்றத்திற்கு எடுப்பும், மிடுக்கும் சேருமன்றோ. *'கீழே விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை'* என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. அதாவது கீழே விழுந்தாலும் வீரம் விலைபோகவில்லை என்பது இதன் அர்த்தம். "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்பது இன்னுமொரு பழமொழி. அதாவது அழகாக வளர்த்த மீசையிலே கூழ் ஆசை குறுக்கிட்டு மீசையைக் குழப்பிவிட்டால் என்ன செய்வது என்பது ஓர் ஏக்கம். *"அத்தைக்கு மீசை முளைத்துச் சித்தப்பன் ஆகினால் என் செய்வது"* என்பது கிண்டல் பகிடி விடும் மற்றுமொரு பழமொழி. பாரதியாரின் மீசையைப் பார்த்துப் பைந்தமிழ்ப் பரவசமடையாத தமிழர்களே இருக்க முடியாது. விடுதலை வேகமும், சக்திப் பிரவாகமும், தமிழ் உணர்வும் அவர் முகப் பொலிவிலே பளிச்சிட்டதை நாம் மறக்க முடியுமா? அவரின் வாரிசான பாரதிதாசனும் இவ்வாறே காணப்பட்டார். நமது ஈழத்துக் கவிஞரான 'தங்கத் தாத்தா' நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் முகப் பொலிவிற்கு அவரின் மீசை அணி செய்யவில்லையா?

தமிழ்நாட்டிலே இருந்த தமிழ் அறிஞர் ம.பொ.சிவஞானக்கிராமணியருக்குத் தலை நரைக்கு முன்னரே மீசை நரைத்து விட்டது. பத்திரிகை நிருபர் ஒருவர் "ஏன் ஐயா உங்களுக்குத் தலை நரைக்க முன்னரே மீசை நரைத்து விட்டது?" என்று கேட்டார். அதற்கு அவர் "தம்பி தமிழ் நாட்டில் நடக்கும் அட்டூழியங்களை என் தலையில் போட்டுக் குழப்புவதில்லை. ஆனால் அவற்றைக் கேட்டு அடிக்கடி எனது மீசை துடிப்பதுண்டு. அதனால் அது களைத்து நரைத்து விட்டது என்றார். மீசை நரைக்காமல் தலை நரைத்தவரைப் பார்த்து அந்த நிருபர் "ஏன் ஐயா தலை முதலில் நரைத்துவிட்டது?" என்று கேட்டார். அதற்கு அவர் "தம்பி மீசை தலைக்கு 16 வயது இளமை. அதனால் தலைக்கு வயது போய் நரைத்துவிட்டது. மீசை இன்றும் இளமையோடு இருக்கிறது" என்றார். "ஆசை நரைத்தாலும் மீசை நரைக்கவில்லையே!" இக்காலத்தில் தான் ஒன்றும் நரைக்காத மாதிரி வேடங்கள் போடலாமே. மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காமல் பூசும் பூச்சுக்களுக்குத்தான் எத்தனை விளம்பரம்! எத்தனை வரவேற்பு!

**மீசைகளின் வகைகள்**

மீசைகள் பலவகைப்படும். மீசைக்கு அணல் என்றும் ஒரு பெயருண்டு. விலங்கினத்தையும், பறவை இனத்தைச் சார்ந்தவையிலும் ஆண்பாலுடையவற்றிற்கு அழகு தருபவை பல உறுப்புக்களாகும். ஆண் யானைக்குத் தந்தம்; சேவலுக்குக் கொண்டைப்பூ; ஆண் சிங்கத்திற்கு அழகான பிடரி மயிர்க் கட்டு; ஆண்மயிலுக்குத் தோகையும் கொண்டைக்கலாபமுமெனச் சிறப்புக்கள் உண்டு. அதே போல மனிதருள் ஆண்களுக்கு அழகு தர இயற்கை அன்னை மீசையை வழங்கியுள்ளாள். இந்த மீசை நாசித் துவாரங்களுள் தூசிகள் புகாமலும் தடுக்கின்றது. அப்படியென்றால் பெண்களுக்கு? அவர்கள் மூக்கில் அணியும் தங்கம், வெள்ளி போன்றவற்றால் ஆன ஆபரணங்கள் தூசிகளைத் தடுக்கின்றது என்பர். உரோமக் கட்டு ஓர்மத்தைத் தரும். இது ஆண்களுக்கே சிறப்பாக அமைந்ததாகும். மீசை அழகை *"மொய்த்து வளர் பேரழகு"* எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இராவணன்மீசை, படர்மீசை, சுடர்மீசை, முறுக்குமீசை, அடர்மீசை, முழுமீசை, கிட்லர்மீசை என மீசைகளில் பல வகையுண்டு. தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே இலக்கிய நயத்துடனும், எழுச்சி நயத்துடனும் இவை சித்திரிக்கப்படுகின்றன. மீசை அழகில்லாத பெண்கள் அதை ஈடுசெய்வதற்கு புருவங்களுக்கு மை தீட்டி காதளவு ஓடும் வரை ஒப்பனை செய்கின்றனர். தமிழர் தம் நாகரிகத்தில் மீசை தனியிடம் வகிப்பதைக் கண்டு மகிழ்வீராகுக.

*'வளங்கெழு மீசை*
*கிளர்ந்தெழுந்தாகுக!'* ✦

## கல்விச்சாலைக் காட்சிகள்



சித்தன்கேணி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெற்றது. முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சியினைப் படத்தில் காணலாம்.
*(படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)*



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி, பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (ஐ-73)



கரணவாய் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தொழிலதிபர் க.சிவகுருநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் செ.சதானந்தனும் உடன் காணப்படுகிறார். (ஐ)



யாழ்.மத்திய கல்லூரியின் நூலகத்திற்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படத்தக்க ஒரு தொகுதி விஞ்ஞான நூல்களை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் சார்பில் அவரது பாரியார் திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை கல்லூரி அதிபர் க.இராசதுரையிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். முன்னாள் அதிபர் நா.க.சண்முகநாதபிள்ளை, பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் கே.இராசாராம், உப அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-135)

## பிரதேச சபையின் ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டி

வலி.தென்மேற்கு,ஜூன்18

வலி.தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபை "2001 மாபெரும் விளையாட்டுப் போட்டியை" ஒழுங்கு செய்துள்ளது.

மரதன், சைக்கிள் ஓட்டம், வலைப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், கரபந்து (செற்அப்) மற்றும் பல போட்டிகள் அடுத்த மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை பிரதேசசபை தலைவர் வெ.அ.ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கழகங்கள் மேற்படி போட்டியில் கலந்துகொள்ளமுடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச சபை திட்டமிடற் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 25ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-185)

# நயினை உள்ளூர் சேவைக்கு புதிய பஸ் இன்று வருகிறது

நெடுந்தீவு, ஜூன் 18

நயினாதீவில் உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் புதிய பஸ் ஒன்று இன்று நயினாதீவுக்கு வந்து சேரவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வட. பி. போ. சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம்—

நேற்றையதினம்250கே. வி. கொண்ட மின் பிறப்பாக்கி ஒன்று மின்சார சபையால் நயினாதீவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலய உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்னர் மின்சார வெளிச்சம் வழங்கப்படுவதற்கான துரித செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மின் பிறப்பாக்கியை நயினாதீவுக்கு எடுத்து வருவதில் வேலணை பிரதேசசெயலர் எஸ். இரத்தினம் ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரி மற்றும் வேலணைப் பிரதேசசபைத் தலைவர் க. கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் துரித நடவடிக்கை எடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-111)

## நயினை நாகபூஷணி உற்சவம்;

# கடைகளின் வியாபாரிகளுக்கு பிரதேசசெயலரின் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இம்முறை உற்சவ ஆரம்ப தினத்திற்குப் பின்பு தற்காலிகக் கடைகளை அமைக்கும் வியாபாரிகள் தமது விற்பனைப் பொருள்களை கரம்பொன் கண்ணகை அம்மன் ஆலய துறைமுகத்தாலேயே கொண்டு செல்ல முடியும் என வேலணைப் பிரதேச செயலர் செ. இரத்தினம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்திற்கு வழமை போல் இம்முறையும் அதிகளவான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதால், சன நெரிசலைக் குறைப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளர். (க-4)

# நிர்வாக சேவை பரீட்சைக்கான முடிவு திகதியை நீடிக்குக!

## ஆனந்தசங்கரி எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

நிர்வாக சேவைக்கு ஆள்களைத் திரட்டுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளுக்கு எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்க வசதியாக முடிவு திகதியை நீடிக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி கேட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த ஜனவரி மாதம் நடந்த இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகளை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதாகப் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது என்றும்—

அந்தப் பரீட்சையில் சித்தியடையும் பட்டதாரிகள் நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வசதியாக முடிவு திகதியை நீடிக்க வேண்டும் என்றும்— ஆனந்தசங்கரி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார். (க-3)

## விடுமுறையில் வன்னி சென்று திரும்பிய

# கிழக்குப் பல்கலை மாணவன் வவுனியாவில் கைது

வவுனியா, ஜூன் 18

வன்னிப்பகுதியில் உள்ள தமது வீட்டுக்கு விடுமுறையில் சென்று திரும்பிவந்த கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு உடையார் கட்டுப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் ஆவார்.

இவர் வவுனியாவில் 211 ஆவது படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள் வன்னியில் இருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்காக வெள்ளிக்கிழமை பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியூடாக வந்தபோது படையினர் அவர்களை வவுனியா 'குட்செட்' வீதி 'சனச' இடைத்தங்கல் முகாமுக்கு விசாரணைக்காகக் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்களில் 9 மாணவர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சுந்தரலிங்கம் கைதுசெய்யப்பட்டமைக்கான எழுத்து மூலமான அறிவித்தல் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குக்கையளிக்கப்பட்டது. (க)

# மூளை மலேரியா பரவுகிறது!

தென்மராட்சி, ஜூன் 18

வடமராட்சி கிழக்குப் (5) யில் மூளை மலேரியாக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் மந்திகை ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் அம்பனில் உள்ள தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் விசேட வைத்திய சிகிச்சை நிலையத்தை வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தி வருகின்றனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரின் இரத்தம் பரிசோதனை செய்து சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-117)

# வரலாற்றுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு நடத்தும் கருத்தரங்குத் தொடரின் இரண்டாவது கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும்.

விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'ஈழத்தமிழரின் வரலாற்றில் தமிழ் அரச உருவாக்கம்' என்னும் தலைப்பில் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பரமு. புஷ்பரட்ணம் கருத்துரை வழங்குவார். (ஐ)

# வாக்கு வாதம் பொல்லடியில் முடிந்தது!

தென்மராட்சி, ஜூன் 18

திருமணப் பேச்சின் போது இடம்பெற்ற வாக்கு வாதம் முற்றி பொல்லடியில் முடிந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை வல்லிபுரக்குறிச்சியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தகப்பனும் மகனும் உட்பட மூவர் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த கே. கிட்டினன் (வயது 52), அவரது மகனான கிட்டினன் சிவகுமார் (வயது 19), உறவினரான இராசதுரை இராசரத்தினம் (வயது 20) ஆகியோரே தாக்குதலுக்கு இலக்கானவர்கள் ஆவார். (க-117)

# தமிழர் கைது

குடியுரிமை மறுக்கப்பட்ட நிலையில் ஹொங்ஹொங் நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சண்முகநாதன் சிவலோகநாதன் (வயது 32) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். (க-10)

# சோதிடம் பார்க்க வந்த நபரால் சங்கிலி அறுப்பு!

நெல்லியடி, ஜூன் 18

சோதிடம் பார்ப்பதாகக் கூறி வீடு ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபர் அங்கிருந்த வயோதிபப் பெண் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துக் கொண்டு தலைமறைவாகினார்.

இத்துணிகரத திருட்டுச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பகல் 1.30 மணியளவில் மந்திகை மில் ஒழுங்கையில் இடம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த க. இரத்தினம் (வயது 75) என்பவரது சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. (க-109)

# தொழிலாளருக்கு கடனுதவி

வட்டு. வடக்கு கற்பகச் சோலைக்கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நுண்கருத் திட்டத்தின்கீழ் மேசன், தச்சுத் தொழில் முயற்சிக்குச் சுழற்சி முறைக் கடனாக வழங்குவதற்கே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் மேசன், தச்சுத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் ரூபா கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் கடனாக வழங்கப்படவுள்ளது. (க-175)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு ஜூன் 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குப் பல்கலைக்கழகத் தாச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:

கோண்டாவில் மறுமலர்ச்சி வி. க. எதிர் யாழ். பல்கலைக்கழக வி. க.

(க-86)

★ ★ ★

வலி. வடக்கு, ஜூன் 18

நல்லூர்ப் பிரதேசசபையின் கீழ் பிரதி செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 7 பேர் பங்குபற்றும் 6 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்—

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:–

கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையம் எதிர் கோண்டாவில்குலக்கோட்டம் ச. ச. நிலையம்.

★ திருநெல்வேலி காளிகோயிலடி ச. ச. நிலைய 'பி' அணி எதிர் கொக்குவில் மேற்கு ச. ச. நிலைய 'பி' அணி.

★ இணுவில் விவேகானந்தா ச. ச. நிலையம் எதிர் கல்வியங்காடு இலங்கை நாயகி ச. ச. நிலையம்.

# மீனவர் தொழில் செய்ய அனுமதி

தென்மராட்சி ஜூன் 18

வடமராட்சிப் பகுதியில் இன்பருட்டி, ஆலடி, ஆதிகோயிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீண்டும் கடந்த சனிக்கிழமை முதல் தொழிலுக்குச் செல்ல படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். கடந்த 3 தினங்கள் அவர்கள் தொழிலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வேளையில் படையினருக்குத் தெரியாமல் இப்பகுதி கடலில் மீன்பிடிக்கச் சென்ற வேளையில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்ட பதினொரு படகுகளும் மூன்று தினங்களின் பின்னர் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டி அமைப்பாளர் ப. இரவீந்திரன் வல்வெட்டித்துறை முகாம் பொறுப்பதிகாரி மேஜர் தம்பித்த, மயிலணி பிரிவுப் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் ஸ்ரீவர்த்தன, இன்பருட்டி பிரிவுப் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் ரமேஸ் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி கடலில் மீன்பிடிக்க அனுமதி பெற்றுக் கொடுத்ததாக இப்பகுதிக் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை ஊரடங்கு வேளையில் பொலிகண்டிப்பகுதிக் கடலில் மீன்பிடிக்கச்சென்ற எட்டு மீனவர்கள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இவர்கள் கொண்டு சென்ற இரண்டு படகுகளும் மீன் பிடி உபகரணங்களும் என்னவாயிற்று என தெரியாமல் உள்ளது.

ஆதிகோயிலடி மீனவர்களின் 8 படகுகளும், இன்பருட்டி மீனவர்களின் 3 படகுகளும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-117)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தீவுப்பகுதி தெற்கு, வேலணைப் பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செயலாளர் செ இரத்தினம் அறிவித்துள்ளார். (க)

## இந்து இளைஞர் சங்க ஆண்டு விழாவில்

# சைவப் பெரியார்கள் நால்வர் பாராட்டிக் கௌரவிப்பு

வலி.வடக்கு, ஜூன் 18

சைவ சமய பண்பாட்டுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நான்கு சைவப் பெரியார்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு விழா ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தலைவர் நா. சிவநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவிலேயே சைவப் பெரியார்கள் நால்வரும் கௌரவிக்கப்பட்டனர்.

பொன்னாடை போர்த்து தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு இந்தப் பெரியார்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள், ஸ்ரீ துர்க்கா தேவிதேவஸ்தான தலைமை லிகிதர் மட்டுவில் சைவத்திரு கா. சிவபாலன், இளைப்பாறிய அதிபர் அளவெட்டி முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம், ஏழாலை சைவப் பெரியார் சி. சண்முகவடிவேல் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவர். (க-86)

# கடவத்தையில் தேடுதல்; 7 தமிழ்ப் பெண்கள் கைது

கொழும்பு, ஜூன் 18

கடவத்தைப் பகுதியில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட திடீர்த் தேடுதல் நடவடிக்கையின் போது 7 தமிழ்ப் பெண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் முஸ்லிம்களால் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி கந்தளாயில் இருந்து அழைத்து வரப்பட்டு கடவத்தைப் பகுதியில் வீடுகளில் பணிப்பெண்களாக அமர்த்தப்பட்டுள்ளவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களைஏமாற்றிக்கூட்டி வந்த முஸ்லிம்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய, B.Com ஆங்கிலம், தொடர்ந்தும் பல்வகை கணக்கியல் கற்கும் அழகிய பொது நிறமுடைய பூர நட்சத்திரம், சுமாரான உயரமுடைய, பெரியோர்களின் நன்மதிப்புடைய பெண்ணுக்கு உள்ளூரில் அரச சேவை புரியும் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தொழில் புரியும் நன்மதிப்புடைய தென்மராட்சி, வலிகாமம், யாழ். பகுதியைச் சேர்ந்த வரன் தேவை. சீதனம் வழங்கப்படும். இ.வேலாயுதர் (ஓய்வூதியர்), கைதடி மத்தி.

(89011)

## இலக்கியக் கட்டுரைகள்

A/L மாணவர்களே! இலக்கிய விமர்சனம் என்றால் என்ன? சிறுகதை மதிப்பீடு என்றால் என்ன? எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர ந.சுந்தரம்பிள்ளையின் 'இலக்கியக் கட்டுரைகள்' என்ற நூலை வாசியுங்கள். (89157)

## தவறிவிட்டது

பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த டாக்டர் செல்வி ஈஸ்வரி கந்தையாவின் விசேட.அ.அட்டை (இல.0907000770) மானிப்பாய் ஆஸ்பத்திரி பின் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 021-2554 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(89158)

## விற்பனைக்கு

21,200 தொடர் இலக்கமுடைய கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 23, உடுவில் வீதி, மானிப்பாய். (89162)

கோப்பி வறுக்கும் மின்சார றோஸ்டருடன் இரண்டு, மேசை மொடல் கோப்பி அரைக்கும் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. றிக்கோ பத்மநாதன் (நவீன சந்தை முன்பாக) 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (89134)

லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஜக்சன் ஜோய், 2/2, மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். காலை 10மணி முதல் 4மணி வரை. (89145)

## தேவை

றோள், பற்றிஸ், சுவிற்ஸ் வகைகள் சமைக்கத் தெரிந்தவர்கள் தேவை. தொடர்பு:- றிக்கோ பத்மநாதன் (நவீன சந்தை முன்பாக) 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (89133)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க இடைக்காலப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைவர் இ. மனோகரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(க-4)

---

உ

கோண்டாவில் கிழக்கு

### ஆசிமட அரசடி விநாயகர் ஆலய

### வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் – 2001

**(இன்று) 18.06.2001 - 29.06.2001**

| | | |
|---|---|---|
| 18. 06. 2001 திங்கட்கிழமை பகல் 10. 30 மணி | – | கொடியேற்றம் |
| 23. 06. 2001 சனிக்கிழமை மாலை 5. 30 மணி | – | பூச்சப்பறம் |
| 24. 06. 2001 ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 30 மணி | – | கைலாயவாகனம் |
| 25. 06. 2001 திங்கட்கிழமை மாலை 5. 30 மணி | – | சப்பறம் |
| 26. 06. 2001 செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணி | – | இரதோற்சவம் |
| 27. 06. 2001 புதன்கிழமை காலை 10. 00 மணி | – | தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்) |
| 27. 06. 2001 புதன்கிழமை மாலை 5. 00 மணி | – | கொடியிறக்கம் |
| 28. 06. 2001 வியாழக்கிழமை மாலை 5. 00 மணி | – | திருக்கல்யாணம் (முருகன்) |
| 29. 06. 2001 வெள்ளிக்கிழமை மாலை 5. 00 | – | வைரவர் உற்சவம் |

மஹோற்சவ குரு: வேதாகம கிரியாஜோதி
பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள்

விநாயகர் அடியார்கள் அனைவரும் வந்து
பெருமானைத் தரிசித்து உய்வார்களாக!

(89161) - ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

---

மறைந்தும் மறையாமல் எமது நெஞ்சங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது தீபத் தாயின்

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணக உருவமாக
1930 - 12 - 04



விண்ணக வடிவமாக
2001 - 05 - 19

## திருமதி
## சின்னத்தங்கம் (சூட்டி) மாணிக்கம்

அவர்கள்

*எண்ணங்கள் எத்தனையோ எங்களைத் தொட்டிட்டாலும்*
*ஏங்கிட வைக்கும் பொல்லா சம்பவம் நிகழ்ந்திட்டாலும்*
*உங்களின் நினைவே எங்கள் உள்ளுக்குள் இருக்கும் தாயே*
*எங்களின் தீபமே நாம் எப்படி மறந்திருப்போம்?*
*நிழலாக எங்களோடு எங்களின் உயிருக்கான*
*மூச்சாக நீங்கள் தானே எம்மோடு இருக்கிறீர்கள்!*

*5ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(89163)

பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரமக்கள், பூட்டமகன்.

---

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 15ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(185074ஏ) (185074பி) (186857ஏ)
(186857பி) (188734ஏ) (188734பி)
(188734சி) (188775ஏ) (189322ஏ)
(190587ஏ) (190657ஏ) (190657பி)
(190657சி) (190662ஏ) (190662பி)
(191762ஏ) (191792ஏ) (191809ஏ)
(191892ஏ) (191911ஏ) (191917ஏ)
(191917பி) (191917சி) (192031ஏ)
(192219ஏ) (192219பி) (192291ஏ)
(192414ஏ) (192414பி) (192466ஏ)
(192466பி) (192466சி) (192466டி)
(193514ஏ) (193517ஏ) (193618ஏ)
(193672ஏ) (193672பி) (193672சி)
(193686ஏ) (193686பி) (193686சி)
(193686டி) (193686ஈ) (193775ஏ)
(194218ஏ) (194304ஏ) (194332ஏ)
(194333ஏ) (194333பி) (194334ஏ)
(194355ஏ) (194355பி) (194355சி)
(194482ஏ) (194482பி) (194890ஏ)
(194890பி) (194909ஏ) (194909பி)
(194982ஏ) (194984ஏ) (195027ஏ)
(195027பி)

### சாவகச்சேரி

(192290ஏ) (192290பி)

### மருதங்கேணி

(164889ஏ) (164890ஏ) (164890பி)
(164890சி) (164891ஏ) (164892ஏ)
(164892பி) (164893ஏ) (164895ஏ)
(164895பி) (164895சி) (164896ஏ)
(164905ஏ) (164905பி) (164908ஏ)
(164908பி) (164914ஏ) (164915ஏ)
(164916ஏ) (164920ஏ)

### நல்லூர்

(191815ஏ) (191815பி) (191868ஏ)
(191996ஏ) (192336ஏ) (192440ஏ)
(192441ஏ) (192441பி) (192465ஏ)
(192465பி) (193502ஏ) (193502பி)
(193519ஏ) (193703ஏ) (193703பி)
(193703சி) (193787ஏ) (193787பி)
(193787சி) (194244ஏ) (194244பி)
(194245ஏ) (194246ஏ) (194293ஏ)
(194293பி) (194307ஏ) (194307பி)
(194406ஏ) (194412ஏ) (194412பி)

### சண்டிலிப்பாய்

(174795ஏ) (181753ஏ) (182609ஏ)
(182641ஏ) (182698ஏ) (182698பி)
(184965ஏ) (184967ஏ) (184967பி)
(184967சி) (184967டி) (186736ஏ)
(186804ஏ) (186804பி) (186975ஏ)
(186976ஏ) (186977ஏ) (189589ஏ)
(190603ஏ) (190603பி) (191753பி)
(191771ஏ) (191783ஏ) (191783பி)
(191862ஏ) (191986ஏ) (191986பி)
(192201ஏ) (192227ஏ) (192355ஏ)
(192357ஏ) (192396ஏ) (192396பி)
(192489ஏ) (192490ஏ) (193584ஏ)
(193625ஏ) (193626ஏ) (193626பி)
(193626சி) (193638ஏ) (193638பி)
(193671ஏ) (193671பி) (193693ஏ)
(193706ஏ) (193736ஏ) (193736பி)
(193737ஏ) (193764ஏ) (193764பி)
(193771ஏ) (193774ஏ) (194201ஏ)
(194286ஏ) (194301ஏ) (194301பி)
(194301சி) (194301டி) (194301ஈ)
(194354ஏ) (194385ஏ) (194401ஏ)
(194405ஏ) (194426ஏ) (194427ஏ)
(194466ஏ) (194490ஏ) (194490பி)
(194490சி) (194490டி) (194858ஏ)
(194858பி) (194865ஏ) (194904ஏ)
(195072ஏ) (195847ஏ) (195862ஏ)

### தெல்லிப்பழை

(175134ஏ) (183464ஏ) (191990ஏ)
(191990பி) (192257ஏ) (192267ஏ)
(192267பி) (192267சி) (192267டி)
(192267ஈ) (192320ஏ) (192320பி)
(193500ஏ) (193500பி) (193500சி)
(193620ஏ) (193620பி) (193621ஏ)
(193683ஏ) (193683பி) (193710ஏ)
(193710பி) (193748ஏ) (194236ஏ)
(194236பி) (194259ஏ) (194259பி)
(194302ஏ) (194302பி) (194302சி)
(194403ஏ) (194955ஏ) (194955பி)
(195038ஏ) (195039ஏ)

### உடுவில்

(176525ஏ) (182644ஏ) (183204ஏ)
(190697ஏ) (190697பி) (190698ஏ)
(190698பி) (192306ஏ) (192324ஏ)
(192324பி) (192350ஏ) (192350பி)
(192350சி) (192350டி) (192363ஏ)
(192437ஏ) (192437பி) (192482ஏ)
(192482பி) (192482சி) (192484ஏ)
(193549ஏ) (193549பி) (193594ஏ)
(193594பி) (193610ஏ) (193611ஏ)
(193611பி) (193627ஏ) (193633ஏ)
(193635ஏ) (193635பி) (193676ஏ)
(193676பி) (193714ஏ) (194229ஏ)
(194287ஏ) (194295ஏ) (194295பி)
(194342ஏ) (194363ஏ) (194363பி)
(194418ஏ) (194418பி) (194859ஏ)
(194896ஏ) (194907ஏ) (195004ஏ)
(195092ஏ) (195092பி)

இம்மாதம் 16ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(189379ஏ) (189380ஏ) (189516ஏ)
(189516பி) (190514ஏ) (190514பி)
(190514சி) (191781ஏ) (191781பி)
(192244ஏ) (192244பி) (192244சி)
(192381ஏ) (192381பி) (192381சி)
(193578ஏ) (193579ஏ) (193579பி)
(193607ஏ) (193660ஏ) (193660பி)
(193678ஏ) (193789ஏ) (193789பி)
(194207ஏ) (194252ஏ) (194252பி)
(194258ஏ) (194322ஏ) (194409ஏ)
(194462ஏ) (194893ஏ) (194918ஏ)
(194924ஏ) (194983ஏ) (194983பி)
(194983சி) (195044ஏ) (195079ஏ)
(195900ஏ) (195900பி) (196976ஏ)

### நல்லூர்

(191027ஏ) (192402ஏ) (192452பி)
(192454ஏ) (193585ஏ) (193782ஏ)
(194194பி) (194247ஏ) (194247பி)
(194294ஏ) (194451ஏ) (194474ஏ)
(194474பி) (194474சி) (194952ஏ)
(194956ஏ) (194989பி) (194990ஏ)
(194992ஏ) (195018ஏ) (195043ஏ)
(195879ஏ)

### சண்டிலிப்பாய்

(179298ஏ) (179298பி) (179298சி)
(183148ஏ) (183148பி) (183244ஏ)
(183244பி) (183244சி) (184926ஏ)
(184966ஏ) (184966பி) (186981ஏ)
(188632ஏ) (188632பி) (190464ஏ)
(190573ஏ) (190716ஏ) (191785ஏ)
(191785பி) (191826ஏ) (191826பி)
(191826சி) (191903ஏ) (191915ஏ)
(191915பி) (191931ஏ) (191931பி)
(191931சி) (191931டி) (192193ஏ)
(192310ஏ) (192353ஏ) (19247ஏ)
(193543ஏ) (193544ஏ) (193544பி)
(193551ஏ) (193551பி) (193598ஏ)
(193598பி) (193659ஏ) (193699ஏ)
(193699பி) (194197ஏ) (194198ஏ)
(194209ஏ) (194209பி) (194209சி)
(194314ஏ) (194314பி) (194371ஏ)
(194393பி) (194399ஏ) (194415ஏ)
(194415பி) (194415சி) (194416ஏ)
(194868ஏ) (194886ஏ) (194886பி)
(194886சி) (194931ஏ) (194953ஏ)
(194989ஏ) (194998ஏ) (194998பி)
(195001ஏ) (195013ஏ) (195014ஏ)
(195014பி) (195016ஏ) (195028ஏ)
(195028பி) (195031ஏ) (195031பி)
(195125ஏ) (195137ஏ) (195137பி)
(195426ஏ) (195843ஏ) (195843பி)
(195925ஏ) (197189ஏ) (197189பி)
(198675ஏ) (198706ஏ) (198707ஏ)
(198707பி) (199590ஏ)

### தெல்லிப்பழை

(189461ஏ) (189461பி) (192379ஏ)
(192468ஏ) (193649ஏ) (193649பி)
(194196ஏ) (194196பி) (194262ஏ)
(194262பி) (194262சி) (194321ஏ)
(194440ஏ) (194443ஏ) (194855ஏ)
(194855பி) (194856ஏ) (194866ஏ)
(194913ஏ) (195143ஏ)

### உடுவில்

(161930ஏ) (161930பி) (161930சி)
(185009ஏ) (189454ஏ) (189455ஏ)
(190696ஏ) (190696பி) (191818ஏ)
(191818பி) (191820ஏ) (191820பி)
(191820சி) (191958ஏ) (191979ஏ)
(191979பி) (191979சி) (191987ஏ)
(191987பி) (192193பி) (192322ஏ)
(192322பி) (192442ஏ) (193495ஏ)
(193523ஏ) (193523பி) (193532ஏ)
(193532பி) (193532சி) (193535ஏ)
(193535பி) (193595ஏ) (193595பி)
(193680ஏ) (193782பி) (193878பி)
(194200ஏ) (194233ஏ) (194264ஏ)
(194294பி) (194341ஏ) (194414ஏ)
(194417ஏ) (194480ஏ) (194878ஏ)
(194930ஏ) (194980ஏ) (194980பி)
(194980சி) (195117ஏ) (198052ஏ)
(198768ஏ) (198768பி) (198768சி)

(க-10)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

We Serve

பிராந்தியப் பணிப்பாளர் வலயம் - 4



## லயன்
## ந.யோகராஜன்

(J.P.All Island. B.A., P.G.Dip. in Edu. & Dip. in Tech. Edu SLTES)

அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*- நல்லூர் லயன்ஸ் கழகத்தினர்*

(89159)

---

# சென்.ஜோன் அம்புலன்ஸ்

தேசிய பாசறை - 2001 காலியில் 02.08.2001 தொடக்கம் 4 நாள்கள் நடைபெறும். மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகளில் யாழ்.மத்திய மாவட்டத்தில் இருந்து 48 வீரர்கள் கலந்து கொள்ளலாம். பளை, தென்மராட்சி, கரவெட்டி, கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லூரி மாணவர்கள் 18 வயதிற்குட்பட்ட கடேற் பிரிவினர்களும், 18 வயதிற்கு மேற்பட்ட கல்லூரி/வெளிவாரி அங்கத்தவர்களும் (ஆண்,பெண்) 3 வருடத்திற்குள் பெறப்பட்ட சான்றிதழுடன் 22-06-2001 கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு உங்கள் அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் காலை 10.00 மணிக்கு வருகை தரவும். சுகாதார அபிவிருத்தித் தொண்டர்களும் பிரதேச பொறுப்பாளர் ஊடாக வரலாம்.

**க.அருந்தவராஜா,**
*மாவட்ட ஆணையாளர்.*

(89160)

*18/4-1, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

---

# கண்ணீர் அஞ்சலி

**திருமதி சிற்றம்பலம் தெய்வானைப்பிள்ளை**

அவர்கள் காலமானதையிட்டு மிகவும் கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்புடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நிர்வாகமும் அங்கத்தவர்களும்
*மாவைக் கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.*

(89164)

# சர்வமதத் தூதுக்குழு இன்று யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்18

தென்பகுதியில் இருந்து நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு சர்வமதத் தூதுக்குழு ஒனறு இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

ஆறு பத்திரிகையாளர்கள் உட்பட 20பேரடங்கிய இந்தக்குழுவினரை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பலாலி விமான நிலையத்தில் வைத்து வரவேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவார்.

21ஆம் திகதிவரை இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளனர்.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகத்தைச் சந்திக்கவுள்ள இக்குழுவினர், 19ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறும் கூட்டம் ஒன்றிலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம், நயினாதீவு விகாரை மற்றும், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர். (க-5)

# மட்டக்களப்பில் 6,800 பேர் காணாமற் போயுள்ளதாக பதிவு

யாழ்ப்பாணம்,ஜூன்18

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறாயிரத்து 800 பேர் காணாமற் போயிருப்பதாக ஜனாதிபதி ஆணைக்குழுவில பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் தலைவர் இரா.துரைரத்தினம் தெரிவித்தார்.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் எற்பாட்டில் அதன் தலைவர் சு.கதிர்காமத்தம்பி யாழ். கொட்டடியில் நடைபெற்ற 'தமிழ் ஊடகவியலாளரும் நாமும்' என்ற கலந்துரையாடலில கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

மட்டக்களப்பில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செயவதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி கே.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டது. இந்தக் குழுவிடமே மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையினர் காணாமற்போயுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். (க-5)


கோப்பாய் தெற்கு - அத்தித்தோட்டம்

**அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய**

**விஷு வருஷ**

**மணவாளக் கோல விழா — சங்காபிஷேக விஞ்ஞாபனம்**

*அம்பிகை அடியார்களே!*

விஷு வருஷம் ஆனிமாதம் 4ஆம் நாள் இன்று (18.06.2001) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அம்பாளுக்கு 108 சங்குகளால் சங்காபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். அதனைத் தொடர்ந்து விஷேட ஆராதனைகள் இடம்பெறும்.

*சங்காபிஷேக பிரதம குரு :-*

பிரம்மஸ்ரீ **தானு மகாதேவா - சோமசுந்தரக்குருக்கள்**

(காயத்திரி பீடம் - இணுவில்)

பிரம்மஸ்ரீ **ம.சௌந்தரராஜசர்மா** (இணுவில்)

ஆலய பிரதம குரு :-

பிரம்மஸ்ரீ **ச.செம்பொற்சோதீஸ்வரசர்மா** (கோப்பாய்)

தெய்வீகப்பேருரை :-

**மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தம்**

(ஆசிரியர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

சிறப்பு நிகழ்ச்சியாக —

வில்லிசை: கலாபூஷணம் **க.நா.கணபதிப்பிள்ளை**

(சின்னமணி குழுவினர் - அச்சுவேலி)

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பிகையின் இறையருளைப் பெற்றுய்வீர்களாக.

- ஆலய பரிபாலனசபை.

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

**இளவரசி றெக்ஸ் ரையில்** 57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**கிருஷிகா ஆடையகம்** 69A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**பிரபா மிக்ஷர் விற்பனையகம்** ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

**தணிகாசலம் புடைவை வாணிபம்** ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி மார்க்கட்.

**பாலாஜி கூல் அன் கொட் (சாப்பிடவாங்க)** திருநெல்வேலி மார்க்கட் வடபுறம். (88166)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 10 . 1945



மறைவு 28 . 06 . 2000

**அமரர் பொன்னுத்துரை கனகசபாபதி**

(கனகராசா)

திதி:18-06-2001

கண்ணை இமைகாப்பது போல் காத்து
எம் நல்வாழ்வுக்கு வழிசமைத்த அன்புருவே!
என்றும் நீர் எம்மனதில் நிலைத்திருப்பீர்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்* (89165)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

# திராட்சைப் பழ விளைச்சலில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூன்18

குடாநாட்டில் இம்முறை திராட்சை பழச்செய்கை விளைச்சல் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக அதிக விளைச்சலைக் கொடுக்கும் மே, ஜூன் மாத வெட்டுப்போகம் இம்முறை திடீரென வீழ்ச்சியடைந்ததால் திராட்சைப் பழச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மிகவும் நஷ்டமடைந்துள்ளனர்.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் விளைச்சல் குறைவுக்குக் காரணம் தற்போது நிலவும் காலநிலையா, உரங்கள் மற்றும் கிருமி நாசினிகளின் பாதிப்பா, மண்வளக்குறைபாடா என்று தெரியவில்லை எனவும், இது தொடர்பாக உடனடியாக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-4)

## கப்பலில் வலைகள்

நெல்லியடி,ஜூன்18

'இந்துருவலி' கப்பலில், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, மீன்பிடி வலைகள் 10 பொதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. (க-109)

## விஞ்ஞான சங்கக் கருத்தரங்கில்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க தூய விஞ்ஞான பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜூன் மாத கருத்தரங்கு நாளை மறுதினம புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகத் துறை விரிவுரை மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'குருதிச் சோகையும் பெண்களும்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா உரையாற்றுவார். (ஐ)


**புலமைப்பரிசில் (43)**

அதி கூடிய புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| ந.திருத்தணிகன் (யா.இ.ஆ.பா.) | 185 |
| சி.கேனகா (யா.இ.ம.ஆ.பா.) | 185 |
| ஜெ.திரோஜன் (யா.இ.ஆ.பா.) | 176 |
| வ.அஜசன் (யா.இ.ஆ.பா.) | 176 |
| சு.டினேஸ்சாந்த் (யா.இ.ஆ.பா.) | 173 |

**புலமைப்பரிசில் (44)**

| | |
|---|---|
| பு.தபோகரன் | 188 |
| டினேஸ்சாந்த் (யா.இ.ஆ.பா.) | 185 |
| T.S.பகீரதி | 182 |
| ஜெ.திவ்வியா (சுதுமலை சிந்மய பாரதி வித்.) | 182 |
| ச.கோபிகாந்தன் (யா.இ.ஆ.பா.) | 181 |

(89767)

**BOND - யாழ்நகர்**

**ராஜா** யாழ்ப்பாணம்

பிரபுதேவா, சரத்குமார், ஜெயாசீல், ஐஸ்வர்யா, கபாலி, விவேக் மற்றும் பலர் நடித்த

**பெண்ணின் மனதைத் தொட்டு**

(C/17060)

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (பு.நே.)

சனி. ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

20.06.2001 முதல்

**சிட்டிசன்**

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன்; அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

**வானவில்**

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(89151)


# அங்கிலிகன் திருச்சபையின் பேராயர் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்18

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு அத்தியட்சாதீனத்தின் 14 ஆவது பேராயராக அண்மையில் பதவியேற்ற அதிவண. டுலீப் டி.சிக்கேரா எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

அன்று மாலை 4.30 மணிக்கு பரியோவான் கல்லூரியில் அவருக்கு பொது வரவேற்பு அளிக்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டுக்குழி பரியோவான் தேவாலயத்தில் இடம்பெறும் அந்த தேவாலயத்தின் இருநூறாவது ஆண்டு விழாவில் பேராயர் பங்கு பற்றுவார். (க-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பல்கலைக்கழக மாணவர்கள்

**ஜெயராஜா யதுநந்தனன், ஜெயராஜா ஜெயநந்தனன்**

ஆகியோரின் தாயாரான

**திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா** அவர்களின்

மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(89169) மாணவர்கள்
மொறட்டுவ பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா

(பாலாமணி)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி ஜெயராஜா (பாலாமணி) நேற்று (17-06-2001) ஞாயிறு காலை கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவசிதம்பரம் - திருமதி வள்ளியம்மை சிவசிதம்பரம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. நடராஜா அவர்களின் அன்பு மருமகளும் ஜெயராஜாவின் அன்பு மனைவியும், ஜனார்த்தனன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), யதுநந்தனன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஜெயநந்தனன் (மொறட்டுவ பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசேகரம்பிள்ளை, இராமலிங்கம், கோபாலபிள்ளை, மோகனச்சந்திரன்,திருமதி யோகேஸ்வரி சண்முகராஜா, திருமதி இராஜேஸ்வரி மகாலிங்கம், திருமதி.யோகாம்பிகை இரட்ணராஜா, காலஞ்சென்ற செல்வி.ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயபாலன், ஜெயரட்ணம், ஜெயசிங்கம், திருமதி.கனகாம்பிகை நாகலிங்கம், திருமதி ஜெயமலர் ஜெயந்தன், காலஞ்சென்ற திருமதி.ஜெயமணி சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை மஹிந்த (F)பிளோறிஸ்ட் மண்டபத்தில் (சந்தைக் கட்டடம் முன்பாக) எதிர்வரும் (20-06-2001) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*2/4 B, WijeyaSiriwardana Rd.,*
*Mt.Lavinia.* (C/17136)

தகவல்:
ஜெயராஜா
(கணவன்)

### திருமதி இலட்சுமி கணபதிப்பிள்ளை

வர்த்தளைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பேச்சியம்மன் கோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி கணபதிப்பிள்ளை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சந்தனம் கணபதிப்பிள்ளை அவர்களின் மனைவியும் திருஞானசுந்தரன், திருமதி சுசீலா கனகசிங்கம், திருமதி சுகுணா தர்மேஸ்வரா, உதயகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகேஸ்வரி, கனகலிங்கம், கனகசிங்கம், தர்மேஸ்வரா, இலக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேச்சியம்மன் கோயிலடி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (89168)

தகவல்:
மகன்:- க.உதயகுமாரன்
(T.குமாரசாமி அன் சன்ஸ்)

### திருமதி பொன்னையா கண்மணி

அச்சுவேலி, இராசவீதியைச் சேர்ந்த திருமதி பொன்னையா கண்மணி நேற்று (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, ஜெயராஜா மற்றும் தங்கமலர் (கனடா), ஜெயச்சந்திரன், காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் பேரின்பராஜா (சுவிஸ்), புஸ்பராஜா (பிரான்ஸ்), காந்தராஜா (கனடா), ரவீந்திரன் (கனடா), பிறேமச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இராஜவீதி, அச்சுவேலியில் உள்ள பொ.ஜெயச்சந்திரனின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஜெயா தொலைத்தொடர்பு நிலையம்,*
*இராஜவீதி,*
*அச்சுவேலி.* (C/17137)

தகவல்:
பொ.ஜெயச்சந்திரன்
(மகன்)

### திருமதி நாகரத்தினம் கனகம்மா

துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் கனகம்மா 15-06-2001 அன்று காலமாகிவிட்டார்.

திடீரெனச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை அடுத்து அன்னாரது இறுதிக்கிரியைகள் மறுநாள் (16-06-2001) சனிக்கிழமை நடைபெற்று விட்டன. பத்திரிகை அறிவித்தலின்படி அறிவிக்காது பூதவுடல் தகனம் செய்யப்பட்டதையிட்டு மிகவும் மனம்வருந்துகின்றோம்.

தகவல்:
நா.செல்வக்குமார் (மகன்)
(V.S.B. குறூப், நெல்லியடி)
நாகரத்தினம் (கணவர்)

(C/17138)

# உயர்மட்டப் பங்களிப்புக் குறித்து நோர்வே இதுவரை புலிகளுக்கு அறிவிக்கவில்லையாம்!

கொழும்பு,ஜூன்18

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு இனிமேல் உயர் மட்டத்தில் இருக்கும் என்பது குறித்து இதுவரை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்படவில்லை என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோண் ஜக்லண்டுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது, சமாதான முயற்சிகளில் நோர்வே உயர்மட்டப் பங்களிப்பை வழங்கும் என இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அணுகுமுறை தொடர்பாக இதுவரை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்படவில்லை.

இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் வழக்கமாக இலங்கை அரசுடன் இடம்பெறும் கலந்துரையாடல்களின் பலாபலன்களை உடனடியாக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்துவார். அவர் வன்னியிலுள்ள தலைமையகத்துக்கு இதுபற்றித் தகவல் கொடுப்பார்.

எரிக் சொல்ஹெய்ம் இந்த விவகாரத்தில் இருந்து புறந்தள்ளப்பட்டிருப்பதால், புதிய அணுகுமுறை குறித்துப் புலிகளுக்குத் தகவல் அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நோர்வே அதிகாரபூர்வமாக அறிவிக்கும் வரை காத்திருப்போம் என்று புலிகளின் வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேநேரம் -

அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நோர்வேத் தரப்பில் குழப்பம் நிலவுவதாக மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

இது விடயமாக முன்கூட்டியே புலிகளுடன் ஆலோசிக்காமை குறித்தும், இனிமேல் புலிகளுடன் எப்படிப் பேசித் தீர்ப்பது என்பது குறித்தும் நோர்வே அரசு மட்டத்தில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் இது தொடர்பாக விசேடதூதர் சொல்ஹெய்ம் மூலமாகவா அல்லது வெளியுறவு அமைச்சர் ஜக்லண்ட் மூலமாகவா பேசுவது என்பது குறித்து நோர்வே குழம்பிப்போய் உள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன. (உ-3)

## நயினை ஆலயத்துக்கு ஜெனரேட்டர்

யாழ்ப்பாணம்,ஜூன்18

நயினைதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு புதிய ஜெனரேட்டர் ஒன்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ.தியாகராசா, பொருளாளர் க.ஜீவநேசன் ஆகியோர் விடுத்த கோரிக்கையை அடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த நடவடிக்கையின் பயனாக கிடைத்த இந்த ஜெனரேட்டரை நேற்று நேரடியாகத் தாம் கையளித்ததாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் அறங்காவலர் சபை உறுப்பினர்களும் நேற்று ஜெனரேட்டரைப் பொருத்தும் பணிகளை மேற்பார்வை செய்தனர்.

ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளரும் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளருமான எஸ்.மனோகரன் இதற்கான பணிகளை மேற்கொண்டிருந்தார்.(உ-3)

## டிப்ளோமா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூன்18

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நடை பெறவிருப்பதாக யாழ்.இந்துக் கல்லூரி நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.(உ-3)

## சுத்திகரிப்புத் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடர்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் இன்று இரண்டாவது நாளாக நடைபெறவுள்ளது.

ஆறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த சனிக்கிழமை மேற்படி தொழிலாளர்களினால் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் கோரிக்கைக்கு மாநகரசபை நிர்வாகம் சரியான பதிலை வழங்காமையினால் வேலை நிறுத்தம் தொடர்வதாகத் தொழிலாளர் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராட்டம் தொடர்பாக ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ். கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று முன்தினம் ஆரம்பமான வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது, அங்கு சமுகமளித்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மாநகர உறுப்பினர் மங்களநேசன், புளொட் உறுப்பினர் மு.தவநாதன், ஈ.பி.டி.பி. உறுப்பினர் எம்.கனகரத்தினம் ஆகியோர் எமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர். மாநகர சபை பிரதி முதல்வரோ அன்றி நிர்வாக அதிகாரிகளோ அங்கு வந்து எம்முடன் கலந்துரையாடவில்லை. எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதாக உறுதிமொழி எதையும் தரவில்லை.

எமது போராட்டம் யாழ்.மாநகர வரியிறுப்பாளரை பாதிப்பதற்கானதல்ல. கடந்த 50 வருடங்களாக - எமது மூதாதையர் காலம் முதல் - இன்றுவரை நன்றாக உழைத்தோம். ஆனால் எந்தவித சுகத்தையும் அனுபவிக்கவில்லை.

இதேவேளை, யாழ். நகரத்தைச் சுகாதாரப்படுத்தும் நாம், இப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் இவ்வேளை நம்மோடு கலந்து பேசாமல் யாழ்.நகரபிதா தொலைபேசியில் பயமுறுத்தியதோடு அல்லாமல் புதிய நியமனங்களை வழங்கி நம்மை மேலும் கீழ்நிலைப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். அவரது நிர்வாகத்துக்கும் ஆட்சியிலிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நகரபிதா உட்பட அக்கட்சியின் உறுப்பினர்களுக்கும் நமது போராட்டத்தின் வலிமையையும் உண்மையையும் உணர்த்துவோம். அது மட்டுமல்லாமல், நாம் உயிரையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டோம் என்பதை உறுதியோடு கூறிவைக்க விரும்புகின்றோம்.

நமது ஒற்றுமையைக் குழப்ப நினைக்கும் எந்தச் சக்திக்கும் சவாலாக இருப்போம்.

நல்ல முடிவை சகல தரப்பினரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம். நலல முடிவு கிடைக்கும் வரை நமது போராட்டம் தொடரும் - என்றுள்ளது. (உ-3-5)

## ஆஸ்திரேலியத் தூதராக ஜானக பெரேரா நியமனம் மன்னிப்புச்சபை கண்டனம்

லண்டன்,ஜூன்18

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆஸ்திரேலிய நாட்டுக்கான தூதுவராக நியமனம் செய்யப்பட்டதை சர்வதேச மன்னிப்புச் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இளைஞர்கள் காணாமற்போதல், தடுப்பு முகாம்களில் இளைஞர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுதல் முதலிய பல்வேறு குற்றச் செயல்களுடன் ஜானக பெரேரா தொடர்புபட்டுள்ளார். இந்த நிலையில் அவரை தூதுவராக நியமனம் செய்திருப்பது நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படாததை எடுத்துக்காட்டுகின்றது என்று சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## ஐ.நா.தூதரகத்தின் உதவி கோரப்படுகிறது

கொழும்பு,ஜூன்18

இலங்கையில் குடிசனமதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியை குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் குடிசன மதிப்பீடு தொடர்பான பணிகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகளிடம் அனுமதியை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் பெற்றுத்தரும் எனத் தாம் நம்புவதாக குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரி ஏ.நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ-3)

### உயர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த விசாரணைப் பிரேரணை தொடர்பான தமது தீர்ப்பை வழங்கிய பின்னர் தெரிவுக்குழு அமைக்கும் ஏற்பாடுகளைச் சபாநாயகர் மேற்கொள்வார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் அவர் ஆராய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

### நகர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றுக்கும் இடையில் நேற்றுகாலை முலவைச் சந்தியில் கோஷ்டி மோதல் ஏற்பட்டதாகவும் -

அதனைத் தொடர்ந்து திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்களும், முலவைப் பகுதி இளைஞர்களும் இராசலிங்கம் வீதியில் வைத்து அவரைக் கடுமையாகத் தாக்கினர் என்றும் -

இதனை அடுத்து அங்கு விரைநத திருநகர் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட குழுவினர் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் -

இதன்போது ஐவர் சிறுகாயங்களுக்கு இலக்காகினர் என்றும் - கூறப்பட்டது.

தொடர்ந்து அந்தப் பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததுடன், சேதத்துக்கு உள்ளான வாகனத்தையும் எடுத்துச்சென்றனர்.

இந்த வாகனத்தில் இருந்து வாள், பொல்லுகள் என்பனவும் மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அதேசமயம் -

நேற்று மாலை 6 மணியளவில் நல்லூர் கோயில் தெற்கு வீதியில் இடம்பெற்ற மற்றொரு கோஷ்டி மோதலில் பிறேமராஜா கிறின்சன் (வயது 25) என்பவர் இடது கையிலும், வலது காலிலும் வாள் வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

இந்த மோதலிலும் பச்சை நிற "ஹையஸ்" வானில் ஆயுதங்களுடன் வந்த சுமார் 15 பேர் பங்கு கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-5-9-51)

### பேச்சுகளில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான கரிசனை கொண்டிருந்தால் அதனை அவர்கள் செயலில் நிரூபிக்க வேண்டும்.

அரசு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த தீவிர முயற்சி செய்துவருகிறது. அந்நிய சக்திகளின் விசமத்தனமான ஊடுருவல்களுக்கு இங்கு இடமில்லை - என்றார் அவர்.(உ-3)

### அரசை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாம் என்று கிழக்கு மக்கள் கோரி வருவதாகவும் -

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இன்று கிழக்கில் பிரார்த்தனை நிகழ்வுகள் பெரிய அளவில் இடம்பெறவிருக்கிறன என்றும் - அவர் மேலும் சொன்னார்.

அதேநேரம் - முன்னாள் பிரதி அமைச்சர் எம்எஸ்எம் ஹிஸ்புல்லாவை திரும்பவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரி காத்தான்குடியில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. (உ-3)

### தீர்வு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் அல்ல. இரு தரப்புகளிடையிலான பேச்சுக்களில் முரண்பாடு காணப்பட்டால் - பேச்சு மேசையில் தீர்வு எட்டப்படாவிட்டால் - புலிகள் மீதான தடையை மீள அமுல்படுத்தலாம். எனவே தற்காலிக ஏற்பாடாகத் தடை நீக்கத்தை அரசு அமுலாக்கலாம்.

ஆனால் அந்தத் தடை நீக்கத்தின் மூலம் நடத்தப்படும் பேச்சுக்கள் தனித் தமிழீழத்தை வலியுறுத்துவதாக அமையக்கூடாது. தனிநாடு கோரும் கோரிக்கைக்குப் பேச்சுக்களில் இடமளிக்கக்கூடாது.

இது விடயத்தில் அரசு மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும். அரசின் நிழல் மந்திரி சபை என்ற வகையில் எமது கட்சி இதை வலியுறுததுகிறது - என்று அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.(உ-3)

## ஜேர்மனியில் 'பொங்கு தமிழ்'!

பேர்லின்,ஜூன்18

ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைகளை வலியுறுத்தி ஜேர்மனியில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நேறறு முன்தினம் முதல் இடம் பெறறு வருகின்றன.

நேற்று முன்தினம் பேனே (Bernau) நகரில் இடம்பெற்ற எழுச்சி நிகழ்வில் ஆயிரத்துக்கு மேற பட்ட ஈழத்தமிழர்கள் பங்குபற்றினர். அங்கு எழுச்சி உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ஜேர்மனியின் மற்றொரு நகரமான ஸ்ராக்காட்டில் (Stuttgart) இன்று எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து ஏனைய நகரங்களிலும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

(உ-3-9)

PC REPAIR & UPGRADE
உங்களது Computer
Working Slow
Display Problem
Getting Stuck
Multimedia Problem
Software Installation
?
எவ்வகையான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.....!
(C/17130)
உங்கள் கம்பியூட்டரில் எந்தப் பிரச்சினையென்றாலும் உடனடியாக எங்களை நாடுங்கள்

| | | |
|---|---|---|
| உயர்தரமான | Pentium 4 | - 110,000.00 |
| கணனிகள் | Pentium III | - 75,000.00 |
| விற்பனைக்கு | Intel Celeron | - 69,000.00 |
| உண்டு..... | Cyrix | - 59.000.00 |

மற்றும் உதிரிப்பாகங்கள்
MICRO PC SYSTEMS
No. 15, 36th Lane, Wellawatte, Colombo - 06.
Telephone : 074 - 513235, 074 - 516764
Branches
No. 82, New Chetty Street
Kotahena, Colombo - 13
Telphone : 074 - 619673
Web : www.minaa.com
No. 09, Modern Market
Hospital Road,
Jaffna.
Telphone : 021-2067

Physics
திரு. குகன் B.Sc.
A/L 2001, 2002
மின்காந்தத் தூண்டல்
18.06.2001 திங்கள்
(89148)
BARATHY
சித்தன்கேணி

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சத்தியராஜ், ரம்பா, கவுண்டமணி, கௌசல்யா
நடித்த
குங்குமப் பொட்டுக் கவுண்டர்
பிரதிகள் 11.00 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
(C/17139)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணமுத்து செல்லம்

கருகம்பனையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவில் கிழக்கு, நந்தாவில் பகுதியில் வசித்து வந்தவருமான திருமதி சரவணமுத்து செல்லம் நேற்று (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் அனனம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம், பத்மராணி ஆகியோரின் பாசமிகு மாமியும் பகீரதி, ஜெயரதி, மயூரன், மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (C/17140)

தகவல்:
வை.சிவசுப்பிரமணியம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.